
# மயக்கம் தெளிந்தது

கே.பி.நீலமணி



காயத்ரி பப்ளிகேஷன்

# மயக்கம் தெளிந்தது

(மதுவின் பிடிக்குள் சிக்கி குடிப் பழக்கத்திற்கு அடிமையாகி—குடும்பத்தை குருக்ஷேத்திரமாக்கி மிருக வாழ்வு வாழ்கிற மனிதனுக்கு, குடியின் கேட்டினை விளக்கி—அவர் தம் தவறுகளை உணர்த்தி — வளமான வாழ்விற்கு வழிகாட்டும் நாவல்.)

கே. பி. நீலமணி

**காயத்ரி பப்ளிகேஷன்**
26/B, வேதாசல கார்டன்ஸ்,
மந்தைவெளி, சென்னை-600 028.

# நூல் வரலாறு


| | | |
|---|---|---|
| பெயர் | : | மயக்கம் தெளிந்தது |
| ஆசிரியர் | : | கே. பி. நீலமணி |
| மொழி | : | தமிழ் |
| வகை | : | குடிப்பழக்கத்தை எதிர்க்கும் நாவல். |
| பதிப்பு | : | முதற் பதிப்பு |
| உரிமை | : | ஜானகி நீலமணி |
| வெளியிட்ட நாள் | : | டிசம்பர் 1988 |
| தாள் | : | 10.6 Kg. வெள்ளைத்தாள் |
| அளவு | : | 1×8 கிரவுன் |
| அச்செழுத்தின் அளவு | : | 12Pt |
| பக்கங்கள் | : | |
| வெளியிட்டவர் | : | காயத்ரி பப்ளிகேஷன்<br>26/B, வேதாசல கார்டன்<br>சென்னை-28. |
| அச்சிட்டவர் | : | வெற்றி அச்சகம்<br>சென்னை-14 |

**விலை ரூ. 11 - 00**

# இந்த நாவலைப் பற்றி . . . .

இன்றைய உலகில் நாகரிக வளர்ச்சியடைந்து வரும் நாடுகளிடையே நிறம், மொழி, இனம், இவற்றிடை வேற்றுமைகள் இருந்தாலும்—

நடை, உடை, பாவனை, பழக்கவழக்கங்கள், இவற்றில் ஏராளமான வித்தியாசங்கள் இருந்தாலும்—

விடுதலை பெற்ற நாடு; பெறாத நாடு என்கிற பேதமிருந்தாலும் மதுவிற்குத் தங்களை அடிமைப்படுத்திக் கொள்வதில் அனைத்துமே ஒற்றுமையாயுள்ளன.

மது அருந்துவதும்—

மது அளிப்பதும், சிறந்த விருந்தோம்பல் எனக் கொண்ட மேலை நாடுகள்; இன்று அந்தப் போதைப் பொருட்களின் பெருக்கத்தையும், அவற்றிற்கு அடிமைப்பட்டு நாளுக்கு நாள் பெருகிவரும் நாட்டு மக்களின் துயரத்தையும் கண்டு, செயலிழந்து நிற்கின்றன. போதைப்

பழக்கம் பள்ளிச் சிறுவன் முதல்—படுகிழவன் வரை, வயது வரம்பின்றி எந்த வயதைச் சேர்ந்தவர்களிடையேயும் பரவலாகப் பரவிவிட்டாலும்—

மரியுவானா; கஞ்சா; ஹிராயின்; எல்.எஸ்.டி. மாத்திரைகள்: பிரெளன்ஷுகர்போன்ற போதை மருந்துப் பழக்கம் இன்று அதிக அளவில் இளைஞர் மத்தியில் பிரபலமாகி விட்டதைக் கண்டு உலகம் பெரும் கவலைக்குள்ளாகியுள்ளது.

அமெரிக்காவில் 12 வயது முதல் 17 வயது வரையிலான இளம் பிள்ளைகளில் கால்வாசிப் பேருக்குமேல், போதை மருந்துகளைப் பயன்படுத்தி வருவதாகவும்; பிரெஞ்சு நாட்டு பள்ளிக் குழந்தைகளில் 30 சதவிகிதத்திற்கு மேல் போதை மருந்துகளை முறையாகப் பயன்படுத்தி வருவதாகவும் ஐ. நா. பிரிவு 1976-ல் வெளியிட்டுள்ள அறிக்கையொன்று கூறுகிறது.

மத்திய கிழக்கு ஆசியா, தென்கிழக்கு ஆசியா, ஆஸ்திரேலியா, மேற்கு ஐரோப்பா, மேற்கு ஜெர்மனி, சிங்கப்பூர், மலேசியா, இத்தாலி, போன்ற பல நாடுகளுடன் ஒப்பிடும் போது; போதை மருந்து பழக்கத்திற்கு அடிமையாவதில் உலகில் அமெரிக்காவே முதலிடம் வகிக்கிறது.

கொகெய்ன், ஹிராயின், மரியுவானா, போன்ற போதை மருந்து ஊசி போட்டுக் கொள்ளாமல் உயிர் வாழவே முடியாத அளவிற்கு இளைஞர்கள் இன்று பாழ்பட்டுள்ளனர்.

இந்நிலைக்கு முக்கிய பொறுப்பேற்க வேண்டிய வர்கள் பெற்றோர்களே !

மதுவையும், போதைப் பொருட்களையும் உபயோகிக்கும் பெற்றோர்கள்; இவற்றைத் தங்கள் குழந்தைகள் எதிரிலேயே உபயோகிக் கிறார்கள். உபயோகித்த பிறகு, அவற்றை அவர் கள் பத்திரப்படுத்தி வைப்பதும் இல்லை. பிள்ளைகளின் பார்வையில் பட்டுக் கொண் டிருக்கும் அந்தப் போதைப் பொருள்கள் அவர் களை உட்கொள்ளத் தூண்டி; நாளடைவில், அந்தக் குழந்தைகளும், பெற்றோருக்குத் தெரியா மலே அந்தக் கொடிய பழக்கத்திற்கு அடிமை யாகி விடுகிறார்கள்.

பிலடெல்பியா பொது மருத்துவமனை யொன்றில் பெற்றெடுக்கப்பட்ட குழந்தைகளில், 14 பேருக்கு ஒரு குழந்தை போதை மருந்துப் பழக்கத்துக்கு அடிமையான தாய்க்குப் பிறந்த குழந்தையாக இருந்ததாக ஓர் ஆய்வு குறிப்பிடு கிறது.

தீய மதுப் பழக்கத்தை எந்த நாட்டினரும்— எந்த மதத்தினரும் ஆதரிப்பதில்லை. அறநூல் களும்—மதுவின் தீமையையே எடுத்து ஓதுகின் றன. அப்படியிருந்தும்—உலகம் முழுதும் எப் படியோ இந்தத் தீய பழக்கம் வெகுவாகப் பரவி விட்டது. இதில் நாட்டுக்கு நாடு கூடுதல் குறைவு இருக்கலாமே ஒழிய பாகுபாடின்றி மதுப் பழக்கம் பரவலாக மனிதரைக் கோரமாகப் பற்றிக் கொண்டுவிட்டது.

தனக்குத் தீமை விளைவிக்கும் என்று அறிந்தும்கூட, மனிதன் மதுவின் வலையில்விழுகிறான். விழுந்த பிறகு மீள முடியாமல் வாழ்வையே அழித்துக் கொள்கிறான்.

எப்படித் தொடங்கினோம் என்று புரியாமலே இன்று லட்சக்கணக்கான இளைஞர்கள் போதைப் பொருட்களின் பிடியில் சிக்குண்டு மீள முடியாமல் தவிக்கிறார்கள். அவர்களின் எதிர்காலம் பாழாகிறது.

எந்த முழு மனிதனையும் மது முட்டாளாக்குகிறது. அருந்திய உடனேயே அவன் சுய சிந்தனையை இழக்கிறான்.

படிப்படியாகத் தன்மானத்தையும்; ஈட்டிய பொருளையும் இழக்கிறான். நண்பர்கள், வீடு, மனைவி, மக்கள் அனைவரையுமே ஒவ்வொன்றாய் இழந்து, ஒரு நாள் அவன் தன்னையும் இழக்கிறான்.

இந்த அவல நிலைக்கு ஆளாக்கும் மதுவின் மரணப் பிடியினின்றும் மக்கள் விடுபடவேண்டும். அவர்கள் உள்ளத்தில் மதுவைப் பற்றிய சிந்தனை, அறவே ஒழியவேண்டும் என்பதே உலகின் இன்றைய பிரார்த்தனை.

நம் பாரத நாடு பழம்பெருநாடு. இந்த மேலைநாட்டு நாகரிகத்தினின்றும், நம் பாரத நாடு ஆதிகாலந் தொட்டு, மாறுபட்டே விளங்கி வந்துள்ளது.

**"உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ளொற்றிக் கண்சாய்பவர்"**

இது வள்ளுவரின் வாக்கு.

(கள்ளை மறைவாக இருந்து உண்டு தம் அறிவு மயங்குவோர்; உள்ளூர் மக்களால் அவ் வுண்மை அறியப்பட்டு; எந்நாளும் எள்ளி நகைக் கப்படுவர் என்பது பொருள்.)

குடிப்பது பாவம் என்றும்—

குடிப்பது தீய செயல் என்றும்—

குடி குடியைக் கெடுக்கும் என்றும்—

பிறர் காணப் பொது இடங்களில் குடிப்பது கௌரவக் குறைவான செயல் என்றும் உறுதி கொண்டிருந்த இந்திய மக்களின் மனம்—

இடையில் வந்த ஆங்கில ஆட்சியால்: அவர் களது கவர்ச்சியால் நிலை தடுமாறத் துவங் கியது. ஆயினும் குடிப்பவர்களின் நியாயப் படுத்தும் செயலையும்: சொல்லையும் இந்த பாரத பூமி அங்கீகரிக்காததே இதன் தனிச் சிறப்பும்; நம்பிக்கைக்குரிய விஷயமும் ஆகும்.

மதுவின் பிடியில் சிக்கியுள்ள ஒருகிராமத்தை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட இந்த நாவலின் நோக்கம்; மனிதன் மயக்கம் தெளிந்து; ஒழுக்கம் மேலோங்கி தன் அயராத உழைப்பினா லும், அறிவினாலும் தாய்நாட்டின் சுபிட்சமான

எதிர்காலத்தை உருவாக்குவதோடு; அமைதியான தன் குடும்பத்திற்குச் சிறந்த தலைமகனாகவும் திகழவேண்டுமென்பதே,

எங்களது இந்த அவா எந்த அளவிற்கு நிறைவேறியுள்ளது; அல்லது வெற்றி பெற்றுள்ளது என்பதைக் காலம்தான் கோடிட்டுக் காட்டவேண்டும்.

**கே. பி. நீலமணி**

# இந்த தார்மீகக் கவலையில் உலகம் முழுதிற்கும் பங்கு உண்டு

விளம்பரம் என்பது ஒரு பொருளின் விற்பனைக்காகச் செய்யப்படுவதுண்டு. ஆனால் ஒரு பொருள் விற்பனை யாகாமலிருப்பதற்காக விளம்பரம் செய்யப்படுவதைப் பற்றிக் கேள்விப் பட்டதுண்டா?

இப்போது அமெரிக்காவிலே இந்தப் புதுமை நடக்கிறது. அங்கு இளைஞர்கள் போதை மருந்துகளைப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்காக, விளம்பரத்துறை இவ்வாறு முடுக்கி விடப் பட்டுள்ளது.

## 150 கோடி டாலர்கள்

இரு நூற்றுக்கும் மேற்பட்ட விளம்பர நிறுவனங்கள் இப்பணியில் ஒத்துழைக்க இணங்கியுள்ளன; போதை மருந்துகளுக்கு எதிரான விளம்பரங்களுக்காகப் பத்திரிகைகளில் இடம் ஒதுக்கித் தரவும், தொலைக் காட்சி, வானொலி போன்றவற்றில் நேரம் ஒதுக்கித் தரவும் அவை சம்மதித்துள்ளன. இவ்வாறு நன்கொடையாகச் செய்து தரப்படும் விளம்பரங்களின் மதிப்பு, அடுத்த மூன்றாண்டு காலத்திற்குள், 150 கோடி டாலர்கள் அளவை எட்டக்கூடும் என்று கணக்கிடப்படுகிறது.

தனியார் துறையின் முயற்சிகளின் பேரில் அமைக்கம்பட்டுள்ள இந்த இயக்கத்துக்குப் **"போதை மருந்துகளற்ற அமெரிக்காவை உருவாக்கும் விளம்பர இயக்கம்"** என்று பெயரிடப் பட்டுள்ளது. நியூயார்க்கைத் தலைமையிடமாகக் கொண்டு இந்த இயக்கம் செயல்படும்.

இந்த இயக்கத்தின் நிர்வாகக் குழு தலைவரான ஆலன் ரோசன்ஷைன் இந்த இயக்கத்தைப் பற்றிப் பத்திரிகையாளர்கள் கூட்டமொன்றில் அறிமுகம் செய்து உரை நிகழ்த்தினார்.

## "பகுத்தறிவுக்கு உகந்ததல்ல"

"போதை மருந்துப் பழக்கம் நல்லதல்ல; பகுத்தறிவுக்கு உகந்ததல்ல; கொஞ்சமானாலும் சரி, அதிகமானாலும் சரி, போதை மருந்துப் பழக்கம் ஏற்றுக் கொள்ளக்கூடியதே அல்ல; மனிதனின் சராசரி நிலைமைக்கு ஏற்றதல்ல" என்று திருப்பித் திருப்பிப் பிரச்சாரம் செய்வதன் மூலமே இந்த இயக்கத்துக்குப் பயன் படைக்கும் என்று ரோசன்ஷைன் கூறினார்.

"போதை மருந்துப் பழக்கத்தை ஏதோ ஒரே ஒரு விளம்பரத்தினால் மட்டும் கட்டுப் படுத்திவிட முடியாது. இப்பழக்கத்திற்கு எதிராகச் சமுதாயத்தின் எல்லாப் பிரிவுகளையும் நோக்கி எல்லாப் பக்கங்களிலிருந்தும் ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு வாரமும், ஒவ்வொரு நாளும் தொடர்ந்தாற்போல் பிரச்சாரம் செய்ய வேண்டும்" என்று அவர் சொன்னார்.

இந்த இயக்கத்தின் முதலாவது கட்டமாகத் தொலைக் காட்சியில் 25 விளம்பரதாரர் நிகழ்ச்சிகள், நாளேடுகளிலும் வார இதழ்களிலும் 28 விளம்பரங்கள், வானொலியில் 6 சிறப்பு நிகழ்ச்சிகள் ஆகியவை தயாரிக்கப்பட்டன, 12 விளம்பர நிறுவனங்கள் இவற்றை இலவசமாக உருவாக்கித் தந்தன.

இதே போல, இரண்டாம் கட்டப் பணியில், 16 விளம்பர நிறுவனங்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

## தொலைக்காட்சியில்

அமெரிக்கா முழுதிலுமுள்ள அனைத்துத் தொலைக் காட்சிகளிலும், சிறப்பு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன; அவற்றுக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது.

நியூயார்க் டைம்ஸ், வால்ஸ்ட்ரீட் ஜர்னல் போன்ற பிரபல பத்திரிகைகள் தங்களது தேசியப் பதிப்புகளிலும், பிராந்தியப் பதிப்புகளிலும் விளம்பரங்களை வெளியிட்டன. டைம், ரீடர்ஸ் டைஜஸ்ட் போன்ற பத்திரிகைகளும் இவ்வாறு இந்த விளம்பரங்களை வெளியிட ஒப்புக் கொண்டுள்ளன.

(ஆசியா மற்றும் தென் அமெரிக்காவில் “போதைப் பொருள் கட்டுப்பாட்டிற்கான ஐ.நா. நிதி” அமைப்பின் நடவடிக்கைகள் தீவிரமாக்கப் பட்டுள்ளன.

போதை மருந்து ஒழிப்பு மற்றும் கட்டுப் பாட்டுத் திட்டங்களுக்கு, ஐ. நா, சபையின் பட்ஜெட்டில் ஒதுக்கப்படும் நிதியின் அளவு:

1980-ம் ஆண்டில் 76 லட்சம் டாலர்களாக இருந்தது. 1986-ல் இது 214 லட்சம் டாலர் களாகவே உயர்த்தப்பட்டது. 1987-ம் ஆண்டில், 316 லட்சம் டாலர்கள் இதற்கென ஒதுக்கப் படும் என்று ஐ. நா. தலைமைச் செயலர் குறிப் பிட்டுள்ளார்)

## பணிக்குழு

போதை மருந்துகளுக்கு எதிரான விளம் பரச் செய்திகள் அமெரிக்கச் சமுதாயத்தில் எந்த அளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்பதை ஆராய்வதற்குப் பணிக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. விளம்பர நிறுவனங் களின் பிரதிநிதிகள், வர்த்தக நிறுவனங்களின் ஆய்வு நிபுணர்கள், போதை மருந்து ஆய்வில் ஈடுபட்டுள்ள தனியார் துறை மற்றும் அரசுத் துறை ஆய்வாளர்கள் ஆகியோர் இப்பணிக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

—ஜானகி நீலமணி
(காயத்ரி பப்ளிகேஷன்)

# மயக்கம் தெளிந்தது

"எல்லா வகையான தீமைகளையும் ஒன்று கூட்டினாற் போலப் பெரும் அழிவைச் செய்வது குடிப்பழக்கந்தான்!"

—ஹென்றி வார்ட் பீச்சர்

தஞ்சை மாவட்டத்தில், பழவனூர் என்னும் வளமானதோர் கிராமத்தில் பலவேசம் பிள்ளையி னுடைய பெரிய பண்ணை இருந்தது.

மற்ற நிலச்சுவான்தார்களுடைய பண்ணை யிலிருந்து மாறுபட்டு, தன்னுடைய பண்ணையை ஒரு முன்மாதிரியாக அவர் உருவாக்கியிருந்தார்.

இயற்கை வளம் கொழிக்கும் கிராமத்தின் மத்தியில், ஆற்றை ஒட்டினாற் போன்ற அவரது பண்ணை அமைப்பும், அதன் வளமையும், அழ கும், பார்ப்பவர்களைப் பரவசப்படுத்தும்.

பலவேசம் பிள்ளை நடுத்தர வயதை உடைய வர். இளம் வயதிலேயே அவருடைய மனைவி

ஓர் மகனைப் பெற்று அவரிடம் ஒப்படைத்துவிட்டு இறந்து போனாள். சிறு வயது முதலே அவர் காந்திஜியிடமும், அவருடைய கொள்கைகளிலும் ஆழ்ந்த பற்று உடையவர்.

இளகிய மனம் படைத்த அவர், தமது பண்ணையில் பணிபுரிகிற அனைவரையும், தம் உறவினர்கள் போல் நேசித்து, அன்பும், ஆதரவும் காட்டி வந்தார். தன்னுடைய ஒரே மகனை, பண்போடு வளர்த்து ஆளாக்கி, அவனை விவசாயத் துறையில் மேற்படிப்புக்காக பட்டணம் அனுப்பி வைத்தார்.

ஏழைகளுக்கு இரங்கும் குணம் படைத்த அவரை, அந்த கிராமத்து மக்கள் அனைவருமே தெய்வம் போல் போற்றி வந்தனர்.

பண்ணையை ஒட்டினாற் போலுள்ள சாலையின் ஆரம்பத்தில் தான், பலவேசம் பிள்ளையினுடைய அழகிய மாடிவீடு இருந்தது. வீட்டிலுள்ள பூஜை அறையைத் தவிர, மற்ற இடங்களிலெல்லாம், நாட்டுக்காகத் தியாகம் செய்த காந்திஜி, நேரு, நேதாஜி, படேல், ராஜாஜி, காமராஜ், ராஜேந்திர பிரசாத், இன்னும் இதுபோன்ற பெரும் தலைவர்களின் படங்களும்; பகத்சிங், திருப்பூர் குமரன், வாஞ்சிநாதன், போன்ற தியாகிகளின் படங்களுமே நிறைந்து காணப்படும்.

பலவேசம் பிள்ளை அதிகாலையிலேயே எழுந்து விடும் பழக்கமுடையவர். எழுந்ததும் பல்துலக்கி, குளித்து, பூஜை முடிக்குமுன் காப்பி கூடச் சாப்பிட மாட்டார். அவருடைய நலனை யும், தேவைகளையும் உணர்ந்து பணிவிடை செய்ய; அந்த பங்களாவில் விசுவாசமுள்ள ஊழி யர்கள் இருந்தனர்.

ஆயினும், கூடுமானவரை அவர் தன்னு டைய பணிகளையெல்லாம், தாமேதான் செய்து கொள்ளுவார்.

பூஜையை முடித்துவிட்டு வெளியே வந்ததும், சமையல்கார சாமிநாதன் மிகுந்த பணிவோடு பலவேசம் பிள்ளை வழக்கமாக உட்காரும் சாய்வு நாற்காலிக்கு அருகில் உள்ள ஸ்டூலில் காப்பியை வைத்து விட்டுச் சென்றான்.

காபியைக் குடித்துவிட்டு, அன்றைய தினசரி யைப் புரட்டிக் கொண்டிருந்த பலவேசம் பிள்ளை, ‘‘கும்பிடறேனுங்க எஜமான்,’’ என்கிற பழக்க மான குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தார்:

‘‘யாரது... பூவாயியா? வா... வா. ஏது இவ்வளவு தூரம், காலங் காத்தாலேயே!’’ என்று ஆச்சர்யத்துடன் வினவியபடியே, தம் அருகில் இருந்த தட்டிலிருந்து இரண்டு ஆரஞ்சுப் பழங் களை எடுத்து, ‘‘இந்தா... சுவாமி பிரசாதம் வாங்

குக்கோ,'' என்று கூறி அதை அவள் கையில் கொடுக்கும்போது — பலவேசம் பிள்ளைக்குந் தூக்கிவாரிப் போட்டது.

அவளுடைய தலையில் பெரிதாக ஒரு கட்டுப் போடப்பட்டிருப்பதை அவர் அப்போதுதான் கவனித்தார்.

''இதென்ன பூவாயி, தலையிலே கட்டு? கீழே கீழே விழுந்துட்டியா?'' என்று பரிவோடு விசாரித்தார்.

பூவாயிக்குத் துக்கம் பொத்துக் கொண்டு வந்தது. அவள் மௌனமாகக் கீழே குனிந்தபடி நின்று கொண்டிருந்தாள்.

''தயங்காமச் சும்மாச் சொல்லு பூவாயி,'' என்று பலவேசம்பிள்ளை கூறவும் அவள் தயங்கிய படியே, ''இல்லீங்க... வந்து..., வந்து, நேத்திக்கு எங்க வீட்டுக்காரரு, கொஞ்சம்... கொஞ்சம்...'' —வார்த்தையை முடிக்க முடியாமல் அவள் தடுமாறினாள். உடனே பலவேசம்பிள்ளை—

''என்னம்மா இது பூவாயி! சும்மா தைரியமாச் சொல்லு. கொஞ்சம்... கொஞ்சம்ன்னு நிறைய வார்த்தையை மென்னு முழுங்கறியே. உன் புருஷன் பழையபடி ஆரம்பிச்சுட்டானா?'' என்றார்.

உடனே பூவாயி சிறிய விசும்பலுடன், ''ஆமாங்க. நேத்து கொஞ்சம் அதிகமாகவே போட்டுட்டாரு போலிருக்கு. நேத்துப் பூரா வீட்டிலே ஒரே ரகளை'', என்றாள்.

பலவேசம் பிள்ளை ஆழ்ந்த பெருமூச்சு விட்டார்: ''ம்...அதுதானே பார்த்தேன். கட்டைப் பார்த்ததுமே நான் நினைச்சேன். இதுக்குத்தான் துரை நேத்திக்கு எங்கிட்டே பூராப் பணத்தையும், தொண தொணத்து வாங்கிக்கிட்டுப் போனானா? அப்பவே நான் நினைச்சேன்; நெனச்ச மாதிரியே தகவலும் வந்திடுச்சு''.

''தகவலுங்களா? என்னங்க எஜமான் அது?'' பூவாயி பரபரப்போடு கேட்டாள்.

பலவேசம், ''பூவாயி, எனக்குத் தெரியாமே இந்தக் கிராமத்திலே ஒரு காரியம் நடந்துருமா? உன் புருஷன், இன்னும் அவனைச் சுற்றியிருக்கிற சில நம்ம பண்ணை ஆட்கள் ஒவ்வொருத்தனும் என்ன பண்ணிக் கிட்டு இருக்காங்கன்னு, எனக்கு அப்பப்ப தகவல் வந்துக் கிட்டுத்தான் இருக்கு. இந்த மாதிரி ஏதாவது நடந்து, ஒரு நாளைக்கு நீ எங்கிட்டே வந்து நிப்பேன்னு எனக்கு எப்பவோ தெரியும்'' என்றார்.

''என்னங்க எஜமான்; தெரிஞ்சிக்கிட்டேவா; இப்படிச் சும்மா இருந்தீங்க?''

"ஆமாம். சும்மா இருக்காமே, நானாக என்ன செய்ய முடியும்? கட்டின புருஷன் இப்படித் தறி கெட்டு அலையறான்னா; அதுக்கெல்லாம் உன்னைப் போல பெண்கள் தானே பொறுப்பு."

பூவாயி பதறிப் போனாள். "என்னங்க எஜமான்; ஒரேமுட்டாப் பழியை என் தலைமேலே போட்டுட்டீங்க. நீங்க சம்பளம் கொடுக்கிற முதலாளி. உங்க கீழே வேலை செய்யறவங்களை நீங்க சொல்லித் திருத்தக் கூடாதுங்களா?" என்றாள்.

உடனே பலவேசம்பிள்ளை, "இதோ பாரு பூவாயி; நான் சம்பளம் கொடுக்கற முதலாளீன்னா; அவங்க வேலை வரைக்கும்தான். அதுக்கும் மேலே, அவங்க சொந்த விஷயத்திலே நான் ஓரளவுக்கு மேலே தலையிட்டேன்னா; நாலு தரம் கேப்பாங்க. அப்புறமும் கேக்கல லேன்னா என் மரியாதை போயிடும். குடிகாரன் காதிலே, நல்லதைக் கரடியாக் கத்தினாலும் ஏறாது. பக்கம் பக்கமா 'குடிக்கறது கெடுதல்னு' எழுதினாலும், அதைப் புரட்டிக் கூட பார்க்க மாட்டான். இதினாலே எல்லாம் ஒரு பிரயோஜனமும் இல்லேன்னு, காந்திஜி பச்சையாகவே சொல்லிப் பிட்டாரு; புரிஞ்சுதா?" என்றார்.

பூவாயி பரிதாபமான குரலில், "அப்போ, நெதக்கும், இப்படிக் குடிகாரப் புருஷன்மாரு ட்டே நாங்க அடிபட்டுச் சாக வேண்டியது

தானா! எங்களுக்கு கதிமோட்சமே இல்லீங்களா?'' என்றாள்.

''இல்லேன்னு நான் சொல்லல்லியே பூவாயி''.

''அப்போச் சொல்லுங்க. அதுக்காத்தாங்க இப்படி விடிஞ்சதும் விடியாததுமா உங்ககிட்டே ஓடியாந்தேன். நீங்க சொல்றபடியே கேக்க றேனுங்க.'' அவள் குரல் கெஞ்சுவது போலிருந்தது.

''பூவாயி, இதை நான் சொன்னா மட்டும் போதாது; அதை நீ ஒருத்தி கேட்டா மட்டும் போதாது. இதிலே இருக்கிற சூட்சுமம் எல்லாம்; உன்னைப் போலெ பொம்பளைங்க கையிலே தான் இருக்கு. நீங்க மனசு வெச்சு, உறுதியோட நின்னு; அதன்படி நடந்தாத்தான் ஜெயிக்க முடியும்'' என்றார் பலவேசம்பிள்ளை.

பூவாயி வெட்கத்துடன் தலையைக் கோணிக் கொண்டு, ''என்ன எஜமான், பரிகாசம் பண்ணு றீங்க?'' என்றாள்.

''பரிகாசமா?'' என்று கேட்ட பலவேசம் பிள்ளை, கேட்டைத் திறந்து கொண்டு ஆறுமுகம் வருவதைப் பார்த்துவிட்டு, ''சரி...சரி. அதோ, உன் புருஷன் வராப்பிலே இருக்கு. நீ இங்கே நிக்க வேண்டாம். உள்ளரப் போய், ரங்கன் மாட்டுக்குத் தண்ணி கிண்ணி காட்டறானான்னு போய்ப் பாரு'', என்று அவளை அனுப்பி வைத்தார்.

# 2

"பிரிட்டனில் ஒவ்வொரு வருடமும், 12500க்கு குறையாத பெண்கள், மதுவால் மரணமடைந்த கணவர்களால் விதவையாக்கப் படுகின்றார்கள்."

—டாக்டர் சாலிப்.

தூரத்திலே ஆறுமுகம் வந்து கொண்டிருப் பதை அறிந்தும், அவனைப் பார்க்க விரும்பாதவர் போல், பலவேசம் பிள்ளை அருகிலிருந்த தின சரியை முகத்துக்கு நேராகத் தூக்கிப் பிடித்தபடி படித்துக் கொண்டிருந்தார்.

ஆறுமுகம் அமைதியாகச் சிறிது நேரம் எட்ட நின்று கொண்டிருந்தான். பின்னர் பொறுமையை இழந்துவிட்டவனைப் போல், அவரது கவ னத்தைத் திருப்ப, "எஜமான் கும்பட றேனுங்க", என்றான் துண்டைக் கக்கத்தில் இடுக்கிக் கொண்டபடி.

பலவேசம்பிள்ளையும், அப்போதுதான் அவ னைக் கவனித்தவர் போல், "அடே... டே... யாற்றா...து. ஆறுமுகமா! ஏது இப்படி இவ்வளவு தூரம் காலங் காத்தாலே?" என்றார்.

ஆறுமுகம் தயங்கினான். அவன் முகம் மிகவும் வாட்டமடைந்திருந்தது. தலையைச் சொரிந்தபடி, "மானேஜரய்யாவை வழியிலே பார்த்தேன். என்னமோ தெரியாமத் தப்புப் பண்ணிட்டேன். இந்த ஒரு வாட்டி மன்னிச்சுப் புடுங்க எஜமான். எல்லாம், இந்த மன்னாராலே வந்தது..."

"ஏண்டா ஆறுமுகம்; இதுதானேடா ஒங்க பொழப்பு! எந்த லோகத்திலே இருக்கோம்கறதே புரியாமே, தலைகால் தெரியாமே அட்டகாசமாகத் தப்பும் தண்டாவும் பண்ண வேண்டியது. போதை தெளிஞ்சதும், கால்லே வந்து விழுந்துட வேண்டியது. குடிகாரன் பொழப்பு இது தானேடா! கள்ளுக் கடையை மூடினா; வார்னிஷ் கடைக்குப் போய் நிக்கறீங்க. அவன் கலக்கிக் குடுக்கறதை வாங்கிக் குடிச்சிட்டு, குடல் வெந்து சாகறீங்க. நானும் தெரியாமத்தான் கேட்கறேன், பெண்டாட்டி, புள்ளை, என்கிற பாசமோ; குடும்பம்ங்கற பொறுப்போ இல்லாத நீங்கள்ளாம், ஏன் அனியாயமா ஒரு பாவமும் அறியாத பெண்ணை, கல்யாணம்ங்கற பேராலே கட்டிக் கிட்டு வந்து சித்திரவதை பண்ணறீங்க?"

"ஐயா... அப்படியெல்லாம் சொல்லாதீங்க எஜமான். இதுதாங்க கடைசி வாட்டி. இனிமே அந்தச் சனியனே கையாலே தொடல்லீங்க".

"டேய்... டேய்... இப்போ நீ தெளிவிலே இருக்கேடா. குழைஞ்சு பேசறே. ராத்திரிப் பார்த்தால்லே தெரியும். உன் கையிலே பட்டாக் கத்தியில்லே சுழலுதாம்; குப்பமே நடுங்குதாமே! ஏண்டா, உன்னோட இன்னும் புதிசா எத்தனை பேரு சேர்ந்திருக்காங்க? நம்ப பண்ணை ஆளுங் கள்லே யாராச்சும் பாக்கி உண்டா?"

"அதெல்லாம், அப்படி ஒண்ணும் இல்லீங்க எஜமான்".

"உண்மையைச் சொல்லுடா. போன வாரம் என்ன செஞ்சேங்கறது உனக்கு ஞாபகம் இருக்கா? எத்தனை சத்தியம் பண்ணினே?"

"தப்புத் தாங்க எஜமான்".

"என்னடா இது... எதுக்கெடுத்தாலும்! செய்யதை எல்லாம் செஞ்சுப் பிட்டு, 'தப்பு... தப்பு'ன்னு ஒரு வார்த்தைலே பேசிட்டா எல்லாம் சரியாப் போயிடுமா? பட்டாமணியம் சேர்வைக்கு உன்னாலே எவ்வளவு ரூபாய் நஷ்டம்னு தெரி யுமா உனக்கு?"

"மன்னிச்சிடுங்க. ஏதோ அன்னிக்குக் கொஞ்சம் 'ஓவறா'ப் போயிடுச்சிங்க.

"இங்கிலீஷ" வேறியா இந்த அழகிலே? எதுடா ஓவரு? நீ குடிச்சதா; இல்லே நீ செஞ்ச காரியமா?"

ஆறுமுகம் மிகவும் தாழ்ந்த குரலில் கூறினான் :—

''ரெண்டுந் தானுங்க''.

பலவேசம் பிள்ளை அவனை வெறுப்போடு பார்த்தார். ''இதைச் சொல்றப்போ உனக்கு வெட்கமாயில்லையா ஆறுமுகம்? சேர்வையோடு ஆளுங்களை அரிவாளாலே வெட்டறதா நினைச்சிக்கிட்டு, அவர் தோட்டத்திலே குலை போட்டு நின்ன வாழையை யெல்லாம் வெட்டிச் சாய்ச்சுப் பிட்டீங்களேடா பாவிங்களா.''

தன்மீது அடுக்கடுக்காய் சுமற்றப்படுகிற குற்றங்களை எல்லாம் ஒப்புக் கொள்கிற பாவனையில் ஆறுமுகம் மௌனமாகக் குனிந்த தலை நிமிராமல் நின்று கொண்டிருந்தான்.

''என்னடா, நான் கேக்கறேன், பதிலையே காணோம்'' என்று பலவேசம் அவன் மௌனத்தைக் கலைத்தார்.

''ஏதோ புத்திகெட்டுப் போச்சு; இனிமே இப்படி நடக்காதுங்க.''

''ஆயிரம் ரூபாய்க்கு மேலே நஷ்டமாமே. உன் புத்தி கெட்டுப் போனதுக்கு; அவருக்கு ஆயிரம் ரூபாய் அபராதமா? ஆயிரம் ரூபாய் யாருடா குடுப்பா?''

''ஆமாங்க. நஷ்டம் கொஞ்சம் அதிகம் தானுங்க'' என்று ஆறுமுகம் கூறிக் கொண்டிருக்கும்போதே குறுக்கிட்ட பலவேசம் பிள்ளை வெறுப் போடு,''கூடச் சேர்ந்து ஆமோதிக்கறீங்களாக்கும். ஏண்டா, மரத்துக்கும், மனுஷனுக்கும் கூட வித்தியாசம் தெரியாத அளவுக்கு அப்படி ஒரு குடியா கேக்குது?'' என்று பலவேசம் கேட்கும்போது ஆறுமுகம் இடைமறித்துக் கூறினான்:

''நான் பாதியிலேயே, உஷாராயிட்டேங்க. மன்னார் கிட்டேச் சொன்னேன், ''டேய்! இதெல்லாம் வாழைங்கடா; ஆளுங்க இல்லே போலிருக்குன்னு. ஆனா இந்த மன்னாருதான், ''சீ... போடா மட்டி; குடிச்சிட்டு உளற்றியா;ஒவ்வொருத்தனும் தலையிலே முண்டாசையும் கட்டிக்கிட்டு, தடிதடியா கையை நீட்டி மறிக்கறது புரியல்லே? சீவுங்கடா இவங்க கழுத்தையெல்லாம்,''ன்னு கத்திக்கினே, சீவித் தள்ளிப்புட்டான்,'' என்றான்.

இதையெல்லாம் கேட்கக் கேட்க, பலவேசம் பிள்ளைக்கு ஒருபுறம் கோபமாகவும், மறுபக்கம் பரிதாபமாகவும் இருந்தது.

''சரி...சரி வாயை மூடுடா, நீயும், உன் மன்னாரும். வெட்கமாயில்லே இதையெல்லாம் இப்போச் சொல்லறப்போ. நீங்க பண்ணியிருக்கிற அட்டகாசத்துக்கு சேர்வை என்ன செய்யறதா இருந்தாருன்னு தெரியுமா?''

‘‘மானேஜரு சொன்னாருங்க. நீங்க சமாதானம் பண்ணி, பணத்தைக் குடுக்கல்லேன்னா, போலீசிலே எங்களை ஒப்படைச்சு இந்நேரம் கம்பி எண்ண வெச்சிருப்பாரு.’’

‘‘நிதானமாயிருக்கறப்போ, எல்லாம் அழகாத் தான் பேசறே. இப்படி எத்தனை நாளைக்குத் தான் ஊர்க்காரங்க எனக்கு மரியாதை கொடுத்து உங்களை விட்டு வெச்சிருப்பாங்க? எல்லாத்துக்குமே ஒரு எல்லை உண்டு இல்லையா?’’

‘‘மாரியாத்தா பொதுவா, இனிமே அந்தப் பக்கம் தலைவெச்சுப் படுக்கமாட்டேனுங்க’’.

‘‘ஆறுமுகம், சாமியை எதுக்குடா இப்ப இழுக்கறே? சத்தியம் தான் சர்க்கரைப் பொங்கலாச்சே உங்களுக்கு. குடிச்சிட்டுத் திரியற நீங்க பண்ணற சத்தியமெல்லாம் பலிக்கிறதுன்னா; உங்க அத்தினிபேரோடு தலையும் என்னிக்கோ, பொடிப் பொடியாயிருக்கும். உங்க பொய்ச் சத்தியத்துக்குப் பயந்து, சாமியே ஊரை விட்டுப் போய் ரொம்ப நாளாச்சுடா ஆறு முகம்,’’ என்று பலவேசம் கூறிக் கொண்டிருக்கும் போதே, களத்துமேட்டு ராமன் பவ்யமாக வந்து நின்றபடி, ‘‘வணக்கங்க எஜமான்’’ என்றான்.

பலவேசம் பிள்ளை அவனைப் பார்த்து, ‘‘ஆமாம், நீங்க ரெண்டு பேரு மாத்திரம் வந்திருக்

கீங்களே; பாக்கிப் பேரெல்லாம எங்கே? இன்னும் போதை தெளியல்லியா?'' என்று கேட்டார்.

ராமன், ஆறுமுகத்தைப் பார்த்துக் கொண்டே ''இல்லேங்க...'' என்று இழுக்கவுமே, ''என்ன இல்லே;...போதை தெளியல்லியா?'' என்றார் பலவேசம் பிள்ளை கிண்டலாக.

ராமன் சிரித்தபடி, ''அது இல்லீங்க, மாயாண்டி கணக்கப் பிள்ளை ஐயாவை இட்டாறப் போயிருக்கான்; கோவிந்தசாமி சாக்கு தெச்சுக்கிட்டிருக்கான்''.

''தொளப்பன் என்னடா ஆனான்?'' என்றார் பலவேசம் பிள்ளை ராமனைப்பார்த்து.

அவன் தயங்கியபடியே, ''காட்டுக்குப் போயிருக்காங்காங்க'' என்றான்.

''ஏன், நீ போறதுக்குப் பதிலா அவனை அனுப்பிட்டியாக்கும் காட்டுக்கு. ஏண்டா, உனக்குப் போய் ராமன்னு யாருடா பேர் வெச்சது? நீ கெட்ட கேட்டுக்கு மூணு பெண்டாட்டி வேறே! கூப்பிட்ட குரலுக்கு ஒருத்தியும் ஓடி வந்து சுருட்டுக்கு நெருப்புத் தரல்லேன்னு வீட்டுக் கூரைக்கு நெருப்பு வெச்சு, லங்கா தகனம் பண்ணினவன் இல்லே நீ'', என்று பலவேசம் பிள்ளை கூறிக்

கொண்டிருக்கும்போது, காவி ஏறிய பற்கள் தாறு மாறாகத் தெரிய ராமன் சிரித்தான்.

“சிரிக்காதேடா. ஆமாம், பட்டைச் சாராயம் காய்ச்சறதிலே தொளப்பன் கில்லாடியாமே” என்று கேட்டார் பலவேசம் பிள்ளை.

உடனே ராமன் வேகமாக, “அதுக்கில்லீங்க; வூட்டுலே வெறகில்லேன்னு தான் காட்டுக்குப் போயிருக்கான்”, என்று விளக்கம் கொடுத்தான்.

பலவேசம் பிள்ளையும் விடாமல், “அதுக்கு? சுள்ளி பொறுக்க இவன்தான் போவணுமோ? பெஞ்சாதியை அனுப்பிட்டு, இங்கவற்றது. வேலை இருக்குன்னு தெரியுமில்லே!” என்று கேட்டார்.

ராமன் மௌனமாக ஆறுமுகத்தின் முகத்தைப் பார்த்தான்.

“ஏண்டா முழிக்கறீங்க. சம்பாதிக்கிற காசை ஒழுங்கா வீட்டிலே கொண்டு போய்க் கொடுத்தா தாண்டா, கட்டினவள் வாய்க்கு ருசியா பண்ணிப் போடுவா. கிடைக்கிறதையெல்லாம் மதுக் கடைக்கு அழுதுட்டு, வீட்டுக்குப் போனா; வெறுங்கை முழம்போடுமா? இல்லே, கழியாலே அடிச்சு மண்டையைப் பொளந்தா, கஞ்சிக்குத் தொட்டுக்க பதார்த்தம் ஆகாசத்திலேருந்து

குதிச்சு வந்துடுமா! சரிதானேடா ராமா நான் சொல்லறது” என்று ஆறுமுகத்திற்கு உரைக்கிறார் போல பலவேசம் பிள்ளை கேட்கவும், “ஆமாங்க எஜமான். எங்க குடும்பத்திலே நடக்கிறது உங்களுக்குத் தெரியாதது என்னங்க இருக்கு எஜமான்?” என்று ராமன் ஒத்துப் பாடினான்.

“சரி...சரி. மத்தவங்களையும் கூட்டுக் கொண்டு கணக்கப் பிள்ளையோடெ சாவடிக்குப் போய் இருங்க. இன்னிக்கு மத்தியானத்துக்குள்ளே எல்லா நெல்லையும் அளந்து, மூட்டை கட்டியாகணும். இந்தா சாவி. நானும் பின்னாலேயே வந்துடறேன்” என்று ஆறுமுகத்திடம் சாவியை பலவேசம் பிள்ளை கொடுத்தார்.

அவர்கள் புறப்பட்டுப் போனதும், பலவேசம் பிள்ளை பூவாயியிடம், சில திட்டங்களை கூறினார். அதன்படி கிராமத்துப் பெண்களை எல்லாம் ஒன்று கூட்டி; எல்லோருடைய ஒத்துழைப்பையும் பெற்றுக் கொண்டு வந்து தன்னிடம் கூறுமாறு சொல்லி அனுப்பினார்.

பூவாயியும் மகிழ்ச்சியோடு புறப்பட்டுச் சென்றாள்.

# 3

"மதுபானக் கடை என்பது நரகப் பாதையிலே போகும்போது கட்டணம் வசூலிக்கும் ஒரு 'டோல்கேட்' ஆகும்."

—டி. ஆண்டர்சன்

பலவேசம் பிள்ளையின் பங்களாவிலிருந்து புறப்பட்ட பூவாயியின் மனம் பலவித எண்ணங்களினால் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தது. தன்னைப் போலவே, ஏராளமான பெண்கள் தங்களுடைய குடிகார கணவன்மார்களால் நிதம் நிதம் தொல்லை அநுபவித்து வருவதை அவள் அறிவாள். ஆனாலும், அவர்கள் எல்லாம் துணிச்சலாக முதலாளி முன் நின்று, தங்கள் புருஷனை விட்டுக் கொடுத்து—தங்கள் குறைகளை எடுத்துக் கூறுவார்களா என்றே பூவாயிக்கு பெரும் கவலையாக இருந்தது. ஆனால்—

குப்பத்திலுள்ள தன்னைப் போன்ற குடியானவப் பெண்களைச் சந்தித்து விஷயத்தை எடுத்துக் கூறியபோது; அவர்கள் எல்லோரும் பூவாயியோடு சேர்ந்து கொண்டு விட்டார்கள். அவள் கூறுகிற எதையும் கேட்கத் தயார் என்று முழு உற்சாகத்துடன் கூறினார்கள்.

எப்படியாவது, 'தங்கள் கணவனைப் பாழும் குடியிலிருந்து மீட்க வேண்டும்; குடும்பத்தில்

அமைதி நிலவ வேண்டும்', என்பதே அவர்களது ஒரே லட்சியமாக இருந்தது. இதைக் கண்டு பூவாயி மகிழ்ந்து போனாள். சட்டிப் பானை கழுவுவதிலிருந்து, சாணி பொறுக்குவது வரை ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்ளாத நாளே கிடையாது. இப்படிப்பட்ட இவர்கள், 'இந்த ஒரு விஷயத்திலாவது இப்படி ஒற்றுமையாக, தன்னுடன் ஒத்துழைக்க முன்வந்தார்களே'' என்று அவள் மனம் பூரித்துப் போனாள். உடனே அவள் இந்த நற்செய்தியைத் தன் முதலாளியிடம் சென்று கூறினாள்.

இதைக் கேட்ட பலவேசம் பிள்ளையின் மனமும் மகிழ்ச்சி அடைந்தது. இனிமேல் இதற்கு ஒரு வழி பிறந்து விடும் என்று அவர் நம்பினார். உடனே பூவாயியை நோக்கி அவர், ''நாளைக்கு எல்லாக் குடியானவங்களுக்கும் வயல்லே வேலை இருக்கு. அதனாலே அவங்க எல்லாம் அங்கே போயிடுவாங்க. அதனாலே, நீங்க வீட்டு வேலைகளை முடித்துக் கொண்டு, எல்லோரும், நம்ம புளியந் தோப்புக்கு வந்துடுங்க. நானும் வர்றேன். அங்கே எல்லோரும் கூடிப் பேசி ஒரு முடிவு எடுக்கலாம்'', என்றார்.

பூவாயியும், 'சரி' என்று தலையாட்டி விட்டு; குப்பத்துப் பெண்களிடம் எல்லாம் இதைக் கூறினாள்.

அதைக் கேட்ட அவர்கள், "நீ, எங்கே கூப்பிட்டாலும், அங்கே வர்றோம். எப்படியாவது நீ தான் இதுக்கு ஒரு வழி பண்ணணும்" என்று ஏகமனதாக ஒப்புக் கொண்டு விட்டனர்.

மறுநாள்—

பலவேசம் பிள்ளை குறிப்பிட்டபடியே அத்தனை குப்பத்துப் பெண்களும் தவறாமல், மாந்தோப்பில் ஆஜராகி இருந்தனர்.

பலவேசம் பிள்ளையைக் கண்டதும், சில பெண்கள் ஓடிச்சென்று அவர் கால்களில் விழுந்து, "எஜமான்... நீங்கதான் இதுக்கு ஒருவழி பண்ணி, எங்க வயித்திலே பாலை ஊத்தணும்", என்று கதறி அழுதனர்.

பலவேசம் பிள்ளை அவர்களைச் சமாதானப் படுத்தினார்.

"இப்படி அழுததினாலே எந்தக் காரியமும் நடக்காது; இந்த மாதிரியான சமயங்களிலே, நீங்க ரொம்ப தைரியமாகச் செயல்படணும். அதை விட முக்கியமா, எல்லோரும் ஒற்றுமையாச் செயல் படணும்".

"நீங்க எது சொன்னாலும் கேக்கறோமுங்க. புருஷன் திருந்தினாப் போதும். நீங்க என்

னமோ, கை நிறையத்தான் சம்பளம் கொடுக்க றீங்க. ஆனா, அது அத்தினியும் கள்ளுக்கடைக்குத் தான் போகுது. அதுவும் போதாதுன்னு, எங்க கூலியையும் பிடிங்கிக்கறாங்க.'' என்றனர் கூட்டத்திலிருந்த பெண்கள்.

உடனே பலவேசம் பிள்ளை, ''அவங்க கேட்டா, நீங்க ஏன் கொடுக்கறீங்க?'' என்று கேட்டார்.

அதற்கு ஒரு பெண், ''குடுக்காட்டி, அடியும் உதையும் யாருங்க படறது'' என்று திருப்பிக் கேட்டாள்.

அதன்பிறகு, தைரியம் அடைந்தவர்கள் போல், ஒவ்வொரு பெண்களும் தங்கள் குறைகளை முறையிடத் துவங்கினர்.

''வீட்டுலே ஒரு காசு முடிஞ்சு வைக்க முடியல்லீங்க. சட்டி, முட்டி, எங்கே ஒளிச்சு வெச்சிருந்தாலும், தேடிப்பிடிச்சு எடுத்துடறாங்க''—

''அப்படித் தேடியும் கிடைக்கல்லேன்னா, கண்ணுமண்ணு தெரியாமெ போட்டு அடிக்கறாங்க எஜமான்.''

''நேத்திக்கு என் புருஷன், சட்டிப்பானைகளை எல்லாம் புள்ளைங்க மேலே வீசி எறிந்து உடைச்சு, புள்ளைக்கு முன் பல்லே போயிடுச்சுங்க,''

“என் அப்பன் வீட்டிலேருந்து நான் காதுலே மூக்கிலே போட்டுக்கிட்டு வந்ததையெல்லாம் ஒண்ணுவிடாமெக் கழட்டிக் கொடுத்தாச்சு எஜமான்; இப்ப நாலு நாளா, ‘கழுத்துத் தாலியையும் கழட்டிக்கொடு; இல்லாட்டி அப்பன் வீட்டிலேருந்து ஏதாச்சும் வாங்கிட்டு வான்னு’ ஒரே ரோதனைங்க. இந்தப் பூவாயிக்கு, எல்லா விஷயமும் தெரியுமுங்க. பிள்ளைங்க எல்லாம் கஞ்சிகூட இல்லாமெ, ‘பசி...பசி’ன்னு பறக்குதுங்க”— என்று கூறும்போது அவள் தன்னையும் மீறி அழுதுவிட்டாள்.

பலவேசம் பிள்ளை அவளைச் சமாதானப் படுத்தி, “நீங்க சொல்லறதெல்லாம் நெசம்னு ஒத்துக்கறேன்; எனக்கும் தெரியும். ஆனால்... இதையெல்லாம் என்கிட்டே முறையிட்டு என்ன பிரயோசனம்? இதுக்குப் பரிகாரம் உங்க கையிலே தானே இருக்கு,” என்றார்.

அதைக் கேட்ட பெண்கள் ஆச்சர்யத்துடன், “எங்க கையிலேயா? இந்தக் குடிகாரங்களை நாங்க திருத்தறதுங்களா?” என்றனர்.

“ஆமாம். ஏன் இப்படி ஆச்சர்யப்படறீங்க? காந்திஜியே இதைப்பத்தி ஆணித்தரமாச் சொல்லியிருக்கார். கள்ளுக் கடைகளை அரசாங்கம் இழுத்துப் பூட்டினா மட்டும் போதாது; நாட்டிலே பூரண மதுவிலக்கைக் கொண்டு வரணும்னா அது

குடும்பப் பெண்கள் கையிலேதான் இருக்கு. அவங்கதான் தீவிர முயற்சி பண்ணணும்னு.''

''எம்மாம் பெரிய விஷயமுங்க அது?''

''முயற்சி பண்ணினா, எதுவும் பெரிய விஷயம் இல்லே.''

''எங்களாலே என்னங்க செய்ய முடியும்? கேவலம், நாங்க பொம்பளைங்க'' என்று அவர்கள் கூறவும், பலவேசம் பிள்ளை மிகவும் உணர்ச்சிவசப்பட்டுப் போனார்.

''பொம்பளைங்கன்னா கேவலமா? அந்தக் காலம் மலை ஏறிப்போச்சு. உங்களைப் பத்தி, நீங்களே ஏன் குறைவா நினைச்சிருக்கீங்க? யானைக்குத் தன்பலம் தெரியாதுன்னு சொல்லு வாங்களே, அதைப் போல இருக்கு உங்க நினைப்பு.

சூரியனையே உதிக்காமப் பண்ணின நளாயினியும்; எமன்கிட்டே வாதாடித் தன் புருஷன் உசிரையே மீட்டுவந்த சாவித்திரியும்; கிருஷ்ண பகவானுக்கே சாரதியாத் தேரோட்டி, நரகாசுரனை யுத்தத்திலே ஜெயிச்ச சத்தியபாமாவும்; மதுரை மாநகரையே ஆண்டு அரசாட்சி செய்த ராணி மங்கம்மாவும்; வெள்ளையனை ஓடஓட விரட்டியடிச்ச, ஜான்ஸிராணியும்; ஏன்—

நம்ம நாட்டையே ஆண்ட இந்திரா காந்தியும் எல்லாம் உங்களைப் போல பெண்கள்தானே!

அந்தப் பரம்பரையிலே வந்த உங்களுக்கு மட்டும் வீரமும், தைரியமும் இல்லாமப் போயிடுச்சா?'' என்று ஆவேசம் வந்தவரைப் போல் கேட்கவும், கூடியிருந்த அத்தனை பெண்களும்—

''இருக்கு எஜமான்... இருக்கு. இப்பவே சொல்லுங்க எஜமான்; நாங்க என்ன பண்ணணும்?'' என்று உணர்ச்சி பொங்கக் கேட்டனர்.

இந்தக் காட்சியைக் கண்டு மனம் பூரித்துப் போனார் பலவேசம் பிள்ளை. அவர்களை நோக்கி, அமைதியாக இருக்கும்படிக் கையமர்த்தியபடி, மிகவும் நிதானமான குரலில் கூறினார்:

''உங்களையெல்லாம் நான் இப்போ போருக்குப் போகச் சொல்லலே; உங்க புருஷனுக்கு எதிரா உங்களைத் தூண்டு விடவும் நான் இங்கே வரல்லே, ஆனா... நீங்க நல்லபடியா, உங்க புஷன் கிட்டே நடந்துக் கிட்டு; அவங்க நிதானத்திலே இருக்கிற போது, இதமா, பக்குவமா, அவங்க கிட்டே இருக்கிற நல்ல குணங்களை எடுத்துச் சொல்லி; அவங்க மனசிலே இரக்கத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் அவங்களை உங்க வழிக்கு கொண்டு வரணும்.''

உடனே ஒருபெண், ''அவங்க கிட்டே ஏதுங்க நல்ல குணம்? எல்லாம் செவிடன் காதிலே ஊதர சங்கு மாதிரித்தான்'' என்றாள்.

அவள் கூறுவதை ஆமோதிப்பது போல் வேறொருவள், ''ஆமாமுங்க. 'இம்'ன்னு நாங்க ஒரு வார்த்தை ஆரம்பிக்கிறதுக்குள்ளேயே, சிப்பாய் மாதிரிப் பாஞ்சிண்டு வந்துடுவாங்களே'' என்றாள்.

பலவேசம்பிள்ளை, ''அதுக் குத்தான் அமைதியா, மனப்பூர்வமான எண்ணத் தோடு, விடாமெ போராடணும்னு சொல்றேன்'' என்றார்.

''போராட்டத்திலே தானுங்களே எங்களுக்கு நிதக்கும் பொழுதே விடியுது. ரவெக்கால்லாம் இருக்கிற காசைக் கொட்டி, குடிச்சிட்டு வந்து ஆட றாங்க. விடிஞ்சா வவுத்தைப் பசிக்குது. அத்தக் கொண்டா, இத்தக் கொண்டா, இடியாப்பத்தைக் கொண்டான்னு கத்தி ரகளை பண்றாங்க. பச்சப் புள்ளைங்க தேவலாம் போல இருக்கு. சட்டியிலே இருந்தாத் தானே - ஆப்பையிலே வரும். இதைச் சொன்னா சண்டைதான்''

''நீங்க சொல்றது உண்மைதான்; நான் ஒத்துக்கறேன். அதனாலேதான் நான் இப்போ ஒரு புது முயற்சிக்கி உங்க ஒத்துழைப்பை எதிர் பார்க்கறேன். வியாதி வந்த பிறகு வைத்தியம் செய்யறதைவிட; நோயேவராமல் தடுத்துடறது நல்லது இல்லியா'' என்று கேட்டார் பலவேசம் பிள்ளை.

''நீங்க என்ன சொல்றீங்கன்னு எங்களுக்குப் புரியலியே எஜமான்'' என்று எதிரே இருந்தவர்

கள் கேட்டபோது பலவேசம்பிள்ளை தன் திட்டத்தை விளக்கிக் கூறினார்.

"குடிகாரனைத் திருத்தறதுக்கு முந்தி, அவனைக் குடிக்க முடியாமல் செய்யணும். அதாவது, நீங்க அத்தனை பேரும் ஒத்துமையா, ஒன்னுசேர்ந்து கள்ளுக்கடை முன்னாலேபோய் நின்று கொண்டு மறியல் பண்ணணும்.

முதல்லே உங்க புருஷனை, "குடிக்க வேணாம், விட்டுக்கு வாங்கன்னு கெஞ்சிக் கேளுங்க" என்று பல வேசம் கூறிக் கொண்டிருக்கும் போதே, "அதெப்படீங்க, குடிக்க வந்த இடத்திலே போய் நின்னுகிட்டு—குடிக்க வேணாம் வீட்டுக்கு வா மச்சான்னா; கழுத்தையில்லே சீவிடு வாங்க" என்றாள் ஒரு பெண்மணி.

உடனே பலவேசம்பிள்ளை, "நீங்க சொல்ற படி நடந்தாலும் ஆச்சர்யப் படறதுக்கு ஒண்ணும் இல்லே. குடிக்காரனுக்கு, மதுவைவிட இந்த உலகத்திலே பொண்டாட்டியோ, பிள்ளையோ, வேறு யாருமே பெரிசுமில்லே; லட்சியமுமில்லே. ஆரம்பத்திலே, இந்தமாதிரியான எதிர்ப்புகளுக்கும் தியாகங்களுக்கும் நம்மை உட்படுத்திக் கொண்டுதான் ஆகணும். வேறுவழியே இல்லை.

ஒரு நன்மையை அடையறதுக்கோ, அல்லது ஒரு தீமையைக் களையறதுக்கோ கஷ்டப்படாமல் இந்த உலகத்திலே எதையும் சாதிக்கவே முடியாது.

ஆனா உங்களுக்கு மன உறுதியும், பூரண நம்பிக்கையும் இருந்தா மட்டும் இந்தக் காரியத்திலே இறங்குங்க; இல்லேன்னா வேண்டாம்.

இது ஒரு நல்ல காரியத்துக்கு; எல்லாத்துக்கு மேலே நம்ம குடும்ப நன்மைக்கு என்கிற முழு எண்ணத்தோடு ஈடுபட்டு, அதுக்காகச் சில பேர் செத்தாக் கூட ஒரு பெருமைதான்; தியாகம் தான். அவர்களுடைய மரணம், மற்றவர்களுடைய கண்களைத் திறக்கும்; புத்தியை மாற்றும். இதை ஒரு தியாகப் போரா அகிம்சை முறையில் நடத்தணும். அதுக்கு, இங்கே கூடி இருக்கிறவங்கள்லே, எத்தனை பேரு தயார்?'' என்று ஒரு சவாலைப் போல் பலவேசம் பிள்ளை கேட்கவும், எதிரே உட்கார்ந்திருந்த அத்தனை பேருமே ஆவேசத்துடன் எழுந்து நின்று, ''நாங்கள் அத்தனை பேருமே தயார்'' என்று கைகளை உயர்த்தி கோரசாக ஒலித்தனர்.

நெதக்கும் அடிபட்டு அடிபட்டு, உடம்பெல்லாம் காய்ச்சுப் போச்சு; அதைவிட, இதுக்காக, மதுக்கடை வாசல்லே சாவறது எவ்வளவோ மேலுங்க''. ஒரு பெண் அழுதாள்.

பலவேசம் பிள்ளையின் அருகில், பூவாயி வந்து நின்று கொண்டிருந்தாள்.

''நாங்கள்ளாம், ரொம்ப நொந்து போயிருக்கிறோம். எப்படியாவது புருஷன் மாரு மனசு

மாறாதான்னு, தவம் கிடக்கிறோமுங்க,'' என்று அவள் கூறும் போது துக்கம் தொண்டையை அடைத்தது.

''கவலைப் படாதீங்க. நான் சொன்னபடியே கூட்டமா, ஆனா, அமைதியாய் போயி காரியத்தைச் செய்யுங்க. சீக்கிரமே நமக்கு நல்ல காலம் பிறக்கும்'' என்று அவர்களுக்கு ஆறுதல் கூறி அனுப்பி வைத்தார்.

வீட்டுக்கு வந்த பூவாயி, அனைவருடனும் கூடி ஆலோசித்தாள்:; என்றைக்கு மதுக் கடை முன் மறியலை வைத்துக் கொள்வது என்று ஆளுக்கு ஒருநாளைக் கூறினார்கள். ஆனால், அதெல்லாம் சரிப்பட்டு வராது என்று பூவாயி கூறி விட்டாள்.

''எடுத்தகாரியம் வெற்றி அடையணும்னா, அத்தனை பேரையும் கூண்டோடெ, மதுக்கடை முன்னாலே மடக்கணும். அதுக்கு, சனிக்கிழமை ஒரு நாள்தான் நல்லது. வாரக்கடைசி. எல்லாருக்கும் சம்பள நாள்—அதாவது அத்த மொத்த வாரக் கூலியையும், மதுக்கடையில் கொட்டி அழுது விட்டு வருகிற துக்க நாள். அந்த நாளையே நம்முடைய வெற்றிக்கு வழி காட்டற நாளா மாத்தியாகணும். ஆகவே, வற்ற சனிக்கிழமை அன்னிக்கு சாயங்காலம், நம்ம போராட்டத்தை வெச்சுகக்லாம்'', என்று பூவாயி கூறவும் அனை

வரும் 'அதுவே சரியென்று' ஒப்புக் கொண்டு விட்டனர்.

# 4

*"மனைவியின் அன்பை வேதனையாக மாற்றவும்; அவளுடைய பெருமையை அவமானச் சின்னமாக்கிச் சிதைக்கவும் மதுவினால் மட்டுமே முடியும்."*

—ஹென்றி கிராடி

கிராமத்தை விட்டுச் சற்று ஒதுங்கினாற் போல், இடும்பன் மலைச்சாரலில் ஒரு நிழலான இடத்தில் அந்த மதுக் கடை அமைந்திருந்தது. அருகிலுள்ள ஆத்தூர் கிராமத்திற்கும், அதைக் கடந்துள்ள, அல்லது சுற்று வட்டாரத்திலுள்ள குப்பங்களுக்குமே அந்தக் கடைதான் சென்டர்!

மதுக் கடையின் உரிமையாளரும், நிர்வாகியுமான காடையன், தன்னுடைய கடையை ஒரு ஐந்து நட்சத்திர அஸ்தஸ்துக்கு உயர்த்தியிருந்தான். பொட்டல் வெளியில் விசாலமான பந்தல் போட்டு, பெரிய மனிதர்கள், ரகசியமாக வந்து மற்றவர்கள் கண்ணில் படாமல் குடித்துவிட்டுப் போவதற்கு வசதியாக ஒதுப்புறமான ஒரு ஓலைக் குடிசை. பார்ப்பதற்கு குடிசையாகக் காட்சியளித்தாலும், அதனுள், வழுவழுப்பான மேஜை நாற்காலிகளும், மின்சார விளக்கும், பூப்போட்ட கண்ணாடி தம்ளர்களும், அவர்களை விசேஷமாகக் கவனிக்கவென்று மங்கம்மாவையும் காடையன் நியமித்திருந்தான்.

மற்றவர்களுக்கெல்லாம் பொதுவான ஒரு இடம்தான்—அதாவது கடையின் முன்னால் தாறுமாறாகப் போடப் பட்டிருக்கும் ஓட்டை உடைச்சல் பெஞ்சிகளும்; தரை டிக்கெட்டும் தான்.

இருப்பதில் சுமாரான பெஞ்சிகளை, முன்னரே வந்து விட்ட ஆறுமுகத்தின் கோஷ்டியினர் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தனர்.

ஆறுமுகம், ராமன், மாயாண்டி, பக்கிரி, சொக்கன், தொப்பளா, குப்பன், கருப்பன் ஆகியோரெல்லாம் அந்தக் கடையின் மரியாதைக்குரிய வாடிக்கையாளர்கள். காரணம் அவர்கள் பலவேசம் பிள்ளையின் பண்ணையில் வேலை பார்க்கிறார்கள். அந்தப் பண்ணையாட்களுக் கெல்லாம் காடையன் ஒரு தனி கௌரவம் காட்டுவது வழக்கம். ஏனெனில், அந்த ஆட்கள் எல்லாம் பண விஷயத்தில் வெகு காரக்ட். அவர்களை கடன் சொல்லும் நிலைமையில் பலவேசம் விட்டு வைப்பதில்லை என்பதுதான் உண்மை.

அன்று சனிக்கிழமை. எல்லோருடைய மடியும், தாராளமாகவே கனத்திருந்தது. சுவாரஸ்யமாக, கையிலுள்ள மது புட்டிகளுடன் கொஞ்சிக் கொண்டிருக்கும் நண்பர்களிடம், மாயாண்டி கோபமாகத் தன்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டிருந்தான்.

"அந்தப் பெரிய மனுஷன்தான் கூப்பிட்டாருன்னா, என்ன தைரியமிருந்தா, இந்தப் பொட்டைக் கழுதைங்களும் மாந்தோப்புக்குப் போயிருக்கும்! நீ உன் பொஞ்சாதியை விசாரிச்சியா பக்கிரி?" என்று கேட்ட மாயாண்டியிடம், "நீ உன் சம்சாரத்தைக் கேட்டியா?" என்று திருப்பிக் கேட்டான் பக்கிரி சற்று சூடாக.

"என் பொஞ்சாதியைக் கேக்கச் சொல்ல நீ ஆருடா?" என்றான் மாயாண்டியும்பதிலுக்கு.

"டேய், நீங்க ரெண்டு பேரும் ஏண்டா இதுக்குப்போய் சண்டை போட்டுக்கறீங்க; அல்லா விஷயத்தையும் ஆறு முகத்தைக் கேட்டா, அவன் சொல்லறான். அவன் சம்சாரம்தானே இந்தக் கழுதைகளுக்கெல்லாம் 'லீடராம்'; என்று கூறி விட்டு, சிரித்தான் குப்பன்.

"லீடர் மட்டுமில்லே குப்பண்ணே; நம்ம முதலாளிக்கு பூவாயிதான், 'ரைட் ஹாண்ட்' என்று ராமன் கூறவுமே; அத்தனை நேரம் மயக்க நிலையிலிருந்த ஆறுமுகம் அலறியபடி "என்னடா சொன்னே சோமாறி..." என்று பாட்டிலைச் சுழட்டிக் கொண்டு எழுந்தான். அதிலிருந்த மது அவன் தலைமீது கொட்டிக் கொண்டிருந்தது.

லேசாக மூண்ட சலசலப்பை அடக்கியபடி தொளப்பன் ஆறுமுகத்திடம் சமாதானமாகக் கூறினான்.

''ஆறுமுகத்தண்ணே, குப்பன் ஒண்ணும் பூவாயியைத் தப்பாச் சொல்லிப் பிடல்லே. நம்ம பூவாயிக்கு முதலாளிகிட்டே செல்வாக்கு இருக்கு; அவ எது சொன்னாலும், நமக்காக நம்ம முதலாளி உதவிபண்ணுவாருன்னு நல்லபடி யாகத்தான் அண்ணே குப்பன் சொன்னான்'' என்று அவன் சப்பைக்கட்டு கட்டிப் பேசியதில் ஆறுமுகமும் குளிர்ந்து போனான்.

அதுமட்டுமல்லாமல், பூவாயி தலைமையில் நம்மை எல்லாம் அடக்கிப்போட, முதலாளி ஏதோ காரியம் பண்ணிக்கிட்டு இருக்கறது என்னமோ உண்மைதான் தொளப்பா'' என்று தனக்குத் தெரிந்த தகவலையும் கூறினான்.

அதைக்கேட்ட பக்கிரி, ''வரவர நம்ம விஷயத்திலே முதலாளி ரொம்ப ஓவராப் போயி தலையிடறாரு அண்ணே. நாம மதுக்கடைக்குப் போறது; சாராயம் காய்ச்சறது, இதையெல்லாம், பெரிய மனுஷனா லெட்சணமா கண்டுக்காமெ ஒதுங்கிப் போயிடவேணாம். அவருநமக்கு கூலி, இனாமாவா தராரு?'' என்று வெடித்தான்.

உடனே அருகிலிருந்ததொளப்பன், 'ஆமாண்ணே, அவரு நம்மசொந்த விஷயத்திலே எல்லாம் கூடத் தலையிடறாரு. என் பெண்சாதியை நான் அடிச்சது; சாராயம் காய்ச்சகாட்டுக்குப்

போறது, இதைப்பற்றி எல்லாம் என்கிட்டேக் கேட்க இவர் யாரு? இவருக்கு என்ன 'ரைட்டு' இருக்கு' என்றான்.

குடித்துக் கொண்டிருந்த ராமன், "அவரை காயறேறு! நம்ம கழுதைங்களை காலெ ஒடிக்கணும். 'நுணுக்'னு ஒண்ணுன்னா முதலாளி கிட்டேப் போயில்லே ஒப்பாரி வைக்கறாளுவ. இந்த நாய்ங்களுக்கு வெக்கம் வேணாம்' என்று குளறினான்.

"இவங்க தான் போறாங்க. அந்தப் பெரிய மனுஷன் நல்ல புத்தி சொல்லி, இனிமே இங்கே வராதீங்கன்னு சொல்ல வேணாம். இவங்கள்ளாம் ஒரு பெரிய மனுஷங்களா?" என்று கேட்டான், அரைமயக்கத்தில் ஆடிக் கொண்டிருந்த அய்யாக் கண்ணு.

உடனே அதை ஆமேதிப்பது போல், "ஆமாண்ணே. நானும் கொஞ்ச நாளாக் கவனிச்சுக்கிட்டுத் தான் வற்றேன். வர வர அவரு போக்கே சரியா இல்லே" என்றான் மாரிமுத்து.

"எப்படிடா சரியா இருக்கும். பெரிய பண்ணையாரு. பெண்டாட்டியை வேறே, சின்ன வயசிலேயே பறி கொடுத்துட்டாரு. ஒரே பையனையும் கண்காணாமே, பட்டணத்துக்குப் படிக்க அனுப்பிட்டாரு. வயசுப் பொண்ணுங்க, நேரமும் காலமும் இல்லாமே படி ஏறி அவரு வீட்டுக்குப்

போனா... சே! என்னதான் பெரிய மனுஷன்னாலும் அவரும் ஒரு ஆண்பிள்ளை தானேடா'' என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்ட கோதண்டம், அதற்கு மேலும் தள்ளாட மாட்டாதவன் போல், தட்டாமாலை சுற்றிக் கொண்டு தரையில் சுருண்டு படுத்துவிட்டான்.

இதைக் கேட்ட ஆறுமுகத்திற்கு என்ன தோன்றியதோ என்னமோ, ''பொறிக்கி நாயே... உன் பெண் சாதியும் தாண்டா அங்கே போயி ஒப்பாரி வைச்சிருக்கா. நம்ம எஜமானைப் பத்தி அது மட்டும் சொல்லாதே; நாக்கு அழுவிப் பூடும்'', என்று முதலாளிக்கு வக்காலத்து வாங்கிப் பேச எண்ணினான். ஆனால், அதற்குள் ஒரு காட்சி பொறி தட்டினாற் போல் அவன் நினைவுக்கு வந்தது—

அன்றொரு நாள், அவன் காலை வேளையில் முதலாளி வீட்டுக்குப் போனதும்—

தலையில் தன்னால் அடிபட்ட காயத்துடன் தன்மனைவி பூவாயி எஜமான் அருகில் நின்று கொண்டிருந்ததும் —

தான் வருவதை தூரத்தில் பார்த்து விட்ட முதலாளி தன் மனைவியிடம் ஏதோ சாடை காட்டி உள்ளே அனுப்பிவிட்டதையும் —

அதன் பிறகு, தான் அந்த வீட்டை விட்டு வெளியே வருகிற வரை, அவள் தன் கண்ணில் படாமலே ஒளிந்து இருந்ததையும் —

இப்போது கோதண்டம் முதலாளியைப் பற்றிக் கூறிய வார்த்தைகளையும் ஒன்றாகக் கூட்டிப் பெருக்கி, கழித்துப் பார்க்கையில் —

'அப்படியும் இருக்குமோ' — என்கிற சந்தேகப் பொறி அவன் உள்ளத்திலும், அனலாய் பறக்கத் துவங்கியது. தன்னையும் மீறி அவன், "பூவாயீ..." என்று அலறியபடித் தன் கையில் இருந்த மதுப்புட்டியை ஓங்கித் தரையில் அடித்தான். அது சுக்குநூறாகி, மது வெள்ளத்தில் பள பளத்துக் கொண்டிருந்த போது பாவாடை கூறினான்:

"அண்ணே; அதோ பாரு. கூட்டத்திலே முன்னாலே வர்றது உன் சம்சாரம் பூவாயிபோலே தான் இருக்கு. அவ பின்னாலே ஒரு பொம்பளைப் பட்டாளமே இல்லே திரண்டு வருது", என்று எங்கோ பார்த்து தொளப்பன் கூறியபோது தான், ஆறுமுகம் அந்தத் திசையையே திரும்பிப் பார்த்தான்,

கையில் ஒரு கம்பை ஏந்தி, அதில் ஏதோ— துணியைக் கொடிபோல் கட்டிப் பறக்க விட்டுக் கொண்டு தூரத்தில் அவள் தலைமை வகித்து

முன்னே வருவதையும், அவள் பின்னால் குப்பத்துப் பெண்களே படை திரண்டு வருவதையும் ஆறுமுகம் கண்டான். அப்போது—

"பாவாடை அண்ணே, நம்ம முதலாளி தன்னோடு பூவாயியை நல்லாத்தான் பாத்து முடுக்கி விட்டிருக்காரு. பாவம் ஆறுமுகத்தண்ணன்..." என்று இருளன் ஏதோ கூறவும்... "டேய்..." என்று அலறிக் கொண்டு அவன்மீது பாயப் போனான் ஆறுமுகம்.

அதற்குள் அந்தப் பெண்கள் கூட்டமும், அவர்கள் கோஷமும் மிக அருகிலேயே வந்து விட்டது. எல்லோர் கவனமும் அந்தத் திசைக்குத் திரும்பியது.

"இன்னிக்கு ரெண்டிலே ஒண்ணு பார்த்திடணும். இங்கே வந்து மறியல் பண்ணப் போறாங்களாம். எம் பெண்சாதி சொன்னது சரியாப் பூடுச்சு. எல்லாரும் 'புல்லா' தண்ணி ஏத்திக்கிங்கடா ஆமாம். இன்னிக்குப் பலவேசத்துக்குச் சரியான பாடம் கற்பிச்சு அனுப்பணும். இவங்களுக்குக் குடுக்கற உதையிலே; அவரு ஊரை விட்டே ஓடிப் போயிடணும்". குடித்து விட்டு தரையில் நெளிந்து கொண்டிருந்த சடையன் புலம்பினான்.

காடையன் அந்த இடத்தில் மதுக் கடை திறந்து ஐந்து வருஷத்திற்கு மேலாகிறது. அவ

னைப் போல், அந்த இடத்தில் அத்தனை நாள் தாக்குப் பிடித்துக்கொண்டு கடை நடத்தியவர்கள், வேறு யாருமில்லை. காரணம் ஆரம்பத்தில் அவன் கடன் கொடுத்து கிராக்கியைப் பிடித்து வலையில் போட்டுக் கொண்டான்.

வியாபாரத் திறமையினாலும், பேச்சு சாதுர் யத்தினாலும், தன்னுடைய வாட்ட சாட்டமான உடம்பைக் காட்டி பயமுறுத்தியே ஒரு வம்பு தும்பு இல்லாமல் இத்தனை காலம் சமாளித்துக் கொண்டு வரும் காடையனே, ஒரு கணம் பிர மித்துப் போனான்.

பெரும் கூட்டமாக இத்தனைக் குப்பத்துப் பெண்களும் எதற்காகத் தன் கடையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள் என்பது அவ னுக்கு விளங்கவில்லை.

இன்று சம்பளத் தேதியானதால், இங்கேயே வசூல் பண்ணிக் கொண்டு போய்விட வேண்டு மென்று புருஷனைத் தேடி வருகிறார்களா அல்லது ஒருவேளை புருஷனோடு போட்டி போட்டுக் கொண்டு, அவர்களும் இங்கே குடிக்கத்தான் வரு கிறார்களோ!

''பாரதமாதாவுக்கு...''--முதல் குரல் எழுப்பி யவள் பூவாயிதான்.

''ஜே''— பொன்னியைத் தொடர்ந்து அனை வரும் கோரசாக வழி மொழிந்தனர்.

"இன்னாத்துக்குடா இந்தப் பொட்டைங்கள் ளாம் இங்கே வந்து கூச்சல் போடறாளுவ?"—

தரையிலிருந்து எழுந்து நிற்க பலமுறை முயன்று கொண்டிருக்கும் சடையன் குழம்பிப் போய் கேட்டான்.

அதற்குள் கூட்டத்தை விலக்கிக் கொண்டு முன்னே சென்ற ஆறுமுகம் தன்மனைவி எதிரில் நின்றுகொண்டு, "ஏ கழுதே... என்னாத்துக்கு இங்கே கடை முன்னாடி வந்து நின்னுக்கிட்டுக் கூச்சல் போடறே," என்று அதட்டினான்.

"கூச்சல் போடல்லே மச்சான்; கும்பிட்டுச் சொல்லறோம். குடிக்க வேணாம்; மிச்சக் காசை எடுத்துக்கிட்டு எங்க கூட வீட்டுக்கு வந்துடுங் கோன்னு கெஞ்சிக் கேக்கறோம்," என்றாள் பூவாயி.

"வராட்டி...?"— குறுக்கே புகுந்து கேட் டான் குப்பன்.

"சத்தியாக்கிரகம் பண்ணுவோம்"

இதைக் கேட்டதும் கூடியிருந்த ஆண்கள் அனைவரும் 'கொல்லென்று சிரித்தனர்.

"அது என்னடி, சாந்திக்கிரகம் புதிசு புதிசா என்னெல்லாமோ கத்துக்கிட்டு வந்து பேசறே. இதெல்லாம் அந்தப் பொறுக்கி பலவேசம் கத்துக் குடுத்தானா...?"

"இந்தாய்யா... நாக்கை அடக்கிப்பேசு. மரியாதை போயிடும்," என்று ஆத்திரமாகக் கத்தினாள் அருகிலிருந்த சடையன் மனைவி பொன்னி. உடனே பூவாயி அவளை அடக்கி சமாதானப் படுத்தினாள்.

"நாங்க என்னடி பேசறது; ஊரே பேசுது. எங்களையெல்லாம் கையாலே ஆவாத கபோதின்னு எண்ணிக்கிட்டானா அந்த முதலாளி"

விஷயம் எங்கோ திசை திரும்பிப் போவதை உணர்ந்த பூவாயி சட்டென்று, "மச்சான், அத் தப்பத்தி எல்லாம் புறவு பேசிக்கலாம். இப்போ முதல்லே நீங்கள்ளாம் அதைக் கீழே எறிஞ் சிட்டு; எங்ககூட வீட்டுக்கு வாங்க" என்று மிகவும் பணிவான குரலில் கூறினாள்.

"ஓ...ஹோ...! படை திரட்டிக்கிட்டுவந்து பயமுறுத்திறியா? பல்லு முப்பத்திரெண்டும் கழண்டு போயிடும்," என்று ஆறுமுகம் பூவாயியிடம் கூறிக்கொண்டிருக்கும்போதே, அருகிலிருந்த பொன்னி, "ஒங்களாலே வேறே என்னய்யா செய்ய முடியும்? வயிறு முட்டக் குடிப்பீங்க. குடிச்சிட்டு வந்து பொம்பளைங்களைப் போட்டு அடிப்பீங்க. பெண்டாட்டி, பிள்ளைகளைப் பற்றி எண்ணிப் பார்க்கத் தோணுதா உங்களுக்கு?" என்று கேட்டாள்.

''நாங்க ஆம்பிளை சிங்கம். அப்படித்தான் அடிப்போம்; உதைப்போம். பொட்டைங்க, மதுக்கடை முன்னாலே வந்து கலாட்டாப் பண்ணறீங்களா?'' என்றான் பொன்னியின் புருஷன்.

''நாங்க கலாட்டாப் பண்ணவும் இங்கே வல்லே; உங்க கையாலே உதை தின்னவும், ஆயி, அப்பன் எங்களைப் பெத்து வள்ர்த்து உன் கையிலே குடுக்கல்லே. பிள்ளை குட்டிகளை நெனச்சுப் பார்த்தாவது எங்க பின்னாலே வாங்க.''

''பிள்ளையாவது... குட்டியாவது... போடீ. மரம் வெச்சவன் தண்ணி ஊத்துவான்.''

''மரம் வெச்சவன் நீதான் ஐயா. அதனாலே தான் உன்னைத் தண்ணி ஊத்தச் சொல்றேன். பாட்டிலைப் போட்டுட்டு வாங்கய்யா; உங்களை ரொம்பக் கெஞ்சிக் கேக்கறோம்.''

இதற்குள்—

மாடசாமி, அந்தப் பெண்கள் கூட்டத்தில் தன் மனைவி மூக்காயியும் இருப்பதைக் கண்டு பெருமகிழ்ச்சியோடு அவள் அருகில் போய் நின்று கொண்டு, வாய்குழற, ''என் ராசாத்தியே! இம்மாந் நேரம் உன்னை நான் கவனிக்கவே இல்லியே. எத்தினி வாட்டி கூப்பிட்டிருக்கேன்; இங்கே வரவே மாட்டியே. இந்தா மூக்காயி, ஒரே ஒரு

வாட்டி இத்தேக் குடிச்சுப் பாரு; என்னா சுகம் தெரியுமா?... அப்புறம் நீ இத்தே விடவே மாட்டே. நெதக்கும் வாங்கியாரச் சொல்லுவே. இந்தா குடி...'' என்று அவள் வாயருகே மதுவை கொண்டு போனான்.

''சீ... மானங்கெட்ட மனுசா! நீ ஒண்டி குடிக்கிற போதே பாதி நாளைக்குப் பட்டினியாலே சாவறோம். என்னையும் வேறே குடிக்கச் சொல்லறியா!'' என்று அவன் கையிலிருந்த கலயத்தைப் பிடுங்கி விசி எறிந்தாள்.

அது எங்கோ நின்று கொண்டிருந்த சுடலை தலைமீது போய் விழுந்து நொறுங்கவுமே, அவன் பாய்ந்து கொண்டு விவரம் புரியாமல் பொன்னியைப் பிடித்துக் கொண்டான்.

உடனே பாய்ந்து கொண்டு வந்த பக்கிரி ''சோமாறி, விடுடா அவளை; எவளோ உன் தலைமேலே கலையத்தைப் போட்டதுக்கு என் பெண்சாதி மேலே எப்படிடா கையை வெப்பே...?'' என்று ஓங்கி ஒரு குத்துவிட்டான்.

சற்று நேரத்திற்கெல்லாம் இருவரும் கட்டிப் புறளத் துவங்கவுமே, பூவாயி, பொன்னி, மூக்காயி, குப்பம்மா, எல்லோருமாகத் தலையிட்டு அவர்களைச் சமாதானப்படுத்திப் பிரித்து விட்டனர். பிறகு அவர்களை நோக்கி பூவாயி கூறினாள்:

"நாள் பூரா பாடுபட்டு, வஞ்சனையில்லாமே உழைச்சுச் சம்பாதிக்கறீங்க. இந்தப் பாழுங்குடியினாலே, உங்க பணமும் பாழாப் போவுது; பால் குடத்திலே துளி விஷம் கலந்தாப்பிலே, உங்க தங்கமான மனசும் பாழாப் போவுது. எங்க பேச்சைக் கேட்டு வீட்டுக்கு வாங்க. உங்க கால்லே விளுந்து கும்பிடறோம்" என்று மிகவும் உருக்கமாகக் கூறினாள். அவள் ஆறாவது வகுப்பு வரைப் படித்திருந்தாள்.

ஆறுமுகம் இப்போது தன் மனைவியின் தலைமயிரைப் பற்றிகொண்டு ஆத்திரத்துடன் கூறினான்: "பிரசங்கமா பண்ணறே? — உன்னாலேதான் இங்கே இத்தினி வம்பும் தும்பும் வந்துட்டுது. உன் உபதேசம் ஒண்ணும் எங்களுக்கு வேணாம். மரியாதையா, எல்லாரையும் இழுத்துக்கிட்டு வந்த வழியே போகல்லீனா, இங்கேயோ கொன்னு குழியைத்தோண்டிப் புதைச்சுப்பிடுவேன். ஒழுங்காப் போகறீங்களா இல்லியா?"

பூவாயி தலையை ஒரு உதறு உதறிக்கொண்டு ஆவேசத்துடன்—ஆனால் பொறுமையை இழக்காமல் கூறினாள்:

"என்னை மட்டும் நீ வெட்டிப் போட்டாப் போதாது. ஒவ்வொருத்தரும் அவங்க அவங்க பெண்டாட்டியையும் இந்தக் கள்ளுக் கடை வாசலிலே வெட்டிப் புதைச் சுப்பிடுங்க. அப்படியே,

வூட்டுக்குப் போய் புள்ளங்களைவும் வெட்டிப்புதை யுங்க.குடும்பத்தையே ஒருவழியாபுதைச்சுட்டு நீங்க உங்க உஷ்டம் போலக் குடிச்சுக் கூத்தடியுங்க. ஆனா...நாங்க உசிரோடு இருக்கிற வரைக்கும்... இனிமே உங்களை இந்தக் கள்ளுக்கடைப் பக்கம் தலை வெச்சுப் படுக்க விட மாட்டோம். இது சத்தியம்.''

அரை மயக்கத்தில் கிறங்கிக் கொண்டிருந்த அந்தக் கூட்டம் கூட ஒரு நிமிஷம் பூவாயியின் பேச்சைக் கேட்டு ஸ்தம்பத்து நின்று விட்டது.

''ஏண்டா வேடிக்கை பார்த்துகிட்டு இருக்கீங்க. அவ கையிலே இருக்கிற கொடிக் கம்பைப் பிடுங்கி, அதாலேயே இந்தக் கழுதைங்களை யெல்லாம் இங்கிருந்து அடிச்சு விரட்டுங்கட'' என்று ஒரு உத்தரவு போல கோதண்டம் கர்சித்துக் கொண் டிருந்தான்.

அத்தனை நேரம் இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டு, வியாபாரத்திலேயே குறியா இந்த காடையன் திடீரென்று உஷாரானான். இனியும் சும்மா இருந்தால், இவர்கள் சண்டை தன்னுடைய கடையைப் பாதித்துவிடும் என்கிற கவலையில் — அல்லது பயத்தில் — அவர்கள் எல்லோர் முன்னிலையிலும் வந்து நின்று கொண்டு கூறினான்:

"இந்தாங்கய்யா — ஆம்பிளே, பொம்பிளே எல்லோருக்கும் சேர்த்துத் தான் சொல்லறேன். உங்க குடும்பச் சண்டையை எல்லாம் வீட்டிலே போய் வைச்சுக்குங்க; இங்கே வேணாம். என் கடை முன்னாலெ எந்தப் பெண்டுகள் மேலேயும் யாரும் கை வைக்கக் கூடாது"

அனைவரையும் சமாதானம் பண்ணுகிற பாணியில்; காசைப் பறித்து அன்றைய வியா பாரத்தை முடித்துக் கொண்டு விட்ட திருப்தியில் பேசுகிற கள்ளுக் கடைக் காரனுடைய பேச்சு, பொன்னியின் கோபத்தைக் கிளறி விட்டு விட்டது.

"இந்தாய்யா, ஞாங்கு மத்தியஸ்தம் பண்ண றியா! இப்போ இங்கே நீ பார்த்தது எங்க குடும்பச் சண்டையா. உப்புக்கும் புளிக்குமா அடிச் சுக்கறோம். மரியாதையா இப்போ, இவங்க கிட்டேருந்து நீ வாங்கிக்கிட்ட காசையெல்லாம் கணக்கும் பண்ணி அவங்க அவங்க கையிலே கொடுக்காட்டி நாங்க இங்கிருந்து போக மாட்டோம்.

"நான் என்ன அவங்க மடியைப் பிடிச்சு இழுத்தா காசைப் பறிச்சுக்கிட்டேன்; நீ என் னமோ புதிசாக் கதை விடறியே. — அப்போ இவங்க குடிச்ச கள்ளுக்கெல்லாம் யாரு பணம் தருவா!"

"உன்னை யாருய்யா குடியைக் கெடுக்கிற இந்தக் கள்ளை, இவங்களுக்குக் கொடுக்கச் சொன்னாங்க?"

காடையன் விகாரமாகச் சிரித்தான்: "இது நல்ல கேள்வி. நான் இவங்களையெல்லாம் உங்க வீட்டிலிருந்தோ, பண்ணையிலிருந்தோ இழுத்துக்கிட்டு வந்தா வாயிலே கள்ளுத் தண்ணியை ஊத்தி, மடியிலே இருக்கிற காசைப் பிடிங்கிக் கிட்டேன். பாத்தீங்களா அண்ணே... இந்தப் பொம்பளைங்க பேசற பேச்சை..."

"இந்தாய்யா ; வாயை மூடு. குழந்தையையும் கிள்ளிவிட்டு; தொட்டிலையும் ஆட்டறியா. முதல்லே இங்கேருந்து நீ உன் கள்ளுக்கடையை எடுய்யா; எங்க மனுஷங்க தானே திருந்திடுவாங்க. எங்க குடியைக் கெடுக்கிறவனே நீதான்ய்யா"

"இந்தாம்மா... சும்மா வாய்க்கு வந்தபடிப் பேசினா நான் சும்மா இருக்கமாட்டேன்."

"என்னய்யா செஞ்சிடுவே எங்களை? மூடுய்யா கடையை"

"என் கடையை மூடச் சொல்ல யாருக்கும் ரைட்டு இல்லே. கவர்ண்மெண்ட்லே லைசென்ஸ் வாங்கியாக்கும் தொழில் நடத்தறேன்" காடையன் சற்று விறைப்பாகவே கூறினான்.

பூவாயி சட்டென்று பொன்னியின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டு, "அக்கா... நாம இங்கே சண்டை போடவா வந்திருக்கோம்? நம்ம எஜமான் சொல்லி அனுப்பிச்சதை மறந்துட்டியா" என்று அவளிடம் மெதுவாகச் சொல்லி விட்டு காடையனைப் பார்த்து நின்று கொண்டு நிதானமாகக் கேட்டாள். "ஏங்க சர்க்கார்லே, லைசென்ஸ் வாங்கி கள்ளுக்கடை வெச்சிருக்கிறதாச் சொன்னீங்க...

"ஆமாம். இப்பவும் அதத்தான் சொல்லறேன். கடைகிட்டே வம்புக்கு வந்தா போலீசைக் கூப்பிடுவேன்."

"நாங்க வம்புக்கோ வழக்குக்கோ இங்கே வல்லீய்யா. நீங்கதான் சொல்லிப்பிட்டீங்களே— குடிச்சுக் குடிச்சு எங்க ஆம்பிளைங்க சாகறதுக்கும்; தாலியறந்து எங்களையும், எங்க பிள்ளை குட்டிகளையும், தெருத் தெருவா பிச்சை எடுத்து, நாயா அலையவிடறதுக்கும் நீங்கதான் கவர்மெண்ட் கிட்டேயிருந்தே லைசென்ஸ் வாங்கிப்பிட்டீங்களே.

ஆனா... உங்களை ஒன்னு கேக்கறேன்; உங்களுக்கும் பெண்டாட்டி பிள்ளைகுட்டிங்க இருக்கும். காரை வீடு கூட வாங்கியிருப்பீங்க. ஆனா... நாங்க இத்தினி பேரும் மண் குடிசைலே தான் வாழறோம். அதுக்குக் கூட குடக் கூலி கொடுக்க முடியாமே; பாதிப்பேரு மரத்தடியிலேவரமுறவங்க.

மாடு மாதிரி புருஷன் பெண்சாதி; ரெண்டு பேருமே வயல்லே உழைங்சு, கைநிறையத்தான் சம்பரதிக்கிறோம். ஆனா... சம்பாதிக்கிற அத்தினியும் உங்ககிட்டே வந்து சேர்ந்திடுது.

அரிசிக்கும், உப்புப்புளி மிளகாய்க்கும் காசுக்கு நாங்க எங்கே போவோம்; எங்க புள்ளைங்கதான் என்ன பண்ணும். எத்தினி நாளைக்குத்தான் ஐயா எங்களாலே பட்டினி கிடக்க முடியும்?'' என்று பூவாயி கூறிக் கொண்டிருக்கும் போதே, காடையன் குறுக்கிட்டு; ''இதையெல்லாம் என்கிட்டே வந்து ஏம்மா சொல்லறே? உங்க புருஷனை நீங்க இல்லே அடக்கி வெச்சிருக்கணும்'' என்றான் வெறுப்போடு.

''அது முடியாமத்தான்யா, உன்கிட்டே வந்து கெஞ்சறோம். இந்தக் கடை வற்றத்துக்கு முன்னே, இவங்க அத்தினி பேருமே, அடங்கி ஒடுங்கி,கௌரவமா இருந்தவங்கதான். இப்போ— நீங்களும் கடை வெச்சு— அவங்களுக்கும் இந்தப் பழக்கம் ஊறிப்போன பிறகு எங்களாலே இவங்களைத் திருத்தவே முடியல்லேய்யா.''

''அதுக்கு, என்னை என்னம்மா செய்யச் சொல்றீங்க?''

பூவாயி பணிவான குரலில் பேசினாள்: ''உலகத்திலே எத்தினியோ தொழில் இருக்குங்க; பிழைப்புக்கும் பஞ்சமில்லை. நீங்க ஒரு மளிகைக்

கடை வையுங்காகா; இந்த ஊரே உங்ககிட்டே வந்து வாங்கும். ஒரு வட்டிக் கடை வையுங்க; தாலியைக்கூட சந்தோஷமா உங்ககிட்டேக் கழட்டிக் கொடுப்போம். ஆனா... இந்தக் கள்ளுக் கடையை மட்டும் நீங்க மூடிடுங்க..'' என்று பூவாயி கூறி முடிப்பதற்குள் காடையனுக்கு எங்கிருந்தோ அப்படியொரு கோபம் வந்துவிட்டது.

''ஓ..கோ அத்தெப்பேசி...இத்தப் பேசி... கடைசியிலே.. என் தலைமேலேயே கையை வைக்கப் பாக்கறீங்களா! அதுக்குத்தான் இப்படிப் படை திரட்டிக்கிட்டு வட்திருக்கீங்கன்னு இப்பல்லே புரியுது,'' என்று உரக்கக் கத்தியவன், ''ராமு...ராமு...'' என்று கடைப்பக்கம் திரும்பிக் கூப்பிடவுமே, ஒரு பொடிப்பையன் ஓடிவந்து அவன்முன் நின்றான்.

காடையன் அவனிடம், ''சிக்கிரமா ஓடிப் போயி; அவுட்போஸ்ட்லே இருக்கிற, இன்ஸ்பெக்டர் ஐயாகிட்டே அவசரமா நாலு போலீசு காரங்களை அனுப்பச் சொல்லு...ஓடு..'' என்று உத்தரவிட்டான்.

இதைக்கண்ட பொன்னி கொதித்தெழுந்தாள்.

''ஏன் ஐயா... போலீசுக்கா ஆள அனுப்பறே. நாங்க என்ன உன் கடையிலே வந்து திருடினோமா; உன் வீட்டிலே வந்து கொள்ளை அடிச்சோமா?

நெற்றி வேர்வை நெலத்தில சிந்தச் சம்பாதிச்சிக் கொண்டு வற்ற காசுக்கு கள்ளெ ஊத்திட்டு; நீ பாலாக் குடிச்சு கொழுத்துப்போய் நிக்கறே! எங்க தாலியை அறுத்து உன் பெஞ்சாதிக்கு நகையும் நட்டும் பண்ணிப்போடறே, குடிக்க வந்தவன் குடிசையைப் பிடுங்கி; நீ மாடி விடு கட்டிக்கிட்டே. எங்களுக்கு எதுக்கு, உனக்கில்லியா ஐயா போலீசு வரணும்.

வேறெ எந்தத் தொழில் பண்ணினாலும், இப்படிக் கொள்ளையடிக்க முடியாதுன்னு தெரிஞ்சு தானேய்யா, நீ இதுக்கும் போய் லைசென்ஸை வாங்கியிருக்கே. ஆனா, ஒண்ணு மட்டும் சொல்லறோம்; நெசம்னு முடிஞ்சிக்கோ. நீ உருப்பட மாட்டே. எங்க வயத்தெரிஞ்சு சம்பாதிச்ச காசு உனக்கு ஒட்டாது; உன் பெண்டாட்டி புள்ளங்க நல்லா இருக்க மாட்டாங்க'', என்று ஒரு கொடிய சாபம் போல் பொன்னி பட பட வென்று பேசிக்கொண்டிருக்கும் போது அருகிலிருந்த காடையன், 'பளார்' என்று பொன்னியின் கன்னத்தில் ஓங்கி ஓர் அறைவிட்டான்.

இதைச் சற்றும் எதிர்பாராத பூவாயி பதறிப் போனாள். அவளுள் குடி கொண்டிருந்த பொறுமை இடம் பெயர்ந்து, அங்கு ஒரு பிரளயமே உருவாவது போல், கோபம் பொங்கி எழுந்தது. ஆனால்—

ஒரு அன்னியன் தங்கள் கண்ணெதிரிலேயே ஒரு பெண்ணை கை நீட்டி அடித்ததைப் பற்றித் தன்னுடைய மனிதர்கள் எவ்வித கோபமோ—சுரணையுமோ இல்லாமல் வாளா இருப்பதைக் கண்டு அவள் வெட்கித்தாள்.

கௌரவர்கள் சபையில் சூதாடித் தோற்ற பாண்டவர்கள் கண் எதிரிலேயே பஞ்சாலி அவமானப் படுத்தப் பட்டது போல; கையில் கொண்டு வந்த காசை எல்லாம் குடித்துத் தீர்த்த இந்தக் குடிகாரர்கள் மத்தியில் பொன்னி அவமானப் பட்டு நிற்கிற போது கட்டிய புருஷனே கையாலாகாதவனைப் போல் மதுவில் மயங்கிக்கிடப்பதைக் கண்டபோது அவளுள் ஒரு பெரும் ஆவேசமே மூண்டது.

'என்ன செய்யலாம்!'— என்று அவள் நிமிஷ நேரம் யோசிப்பதற்குள், எங்கோ குடித்துக் கொண்டிருந்த அவள் புருஷன் ஆறுமுகம் தள்ளாடியபடி அவள் எதிரில் வந்து நின்றபடி, ''மானங் கெட்ட கழுதே. உன்னாலே தான் இத்தினியும்! ஆசைநாயகன் பேச்சைக் கேட்டுக்கிட்டு, படை திரட்டி வந்து கடைக்கார ஐயாவவயே எதிர்த்துப் பேசறீங்களா? நாளைக்கு, இவரு கடையை இழுத்து மூடிட்டாருன்னா, எங்க கதி என்ன ஆவறது! மரியாதையா போலீஸ் வர்றதுக்குள்ளே, உன் கூட்டத்தோடு இங்கேருந்து

போயிடு; இல்லே கொலையே விழும்,'' என்று கத்தினான்.

எல்லாவற்றிற்கும் சிகரம்வைத்தாற் போல்— தங்களைப் பலவேசம் பிள்ளையுடன் இணைத்துப் பேசியதைக் கேட்டபோது பூவாயி வெடித்துப் போனாள்.

''இந்தாய்யா, எங்களைப் போயா நீ மானங் கெட்ட கழுதேன்னு கேக்கறே? இவ்வளவு ஆம் பிள்ளைங்க மத்திலே, ஒரு பொம்பிளையை இந்த ஆளு கை நீட்டி அடிச்சிருக்கான், அதைக் கேக்கத் துப்பில்லாமே; அத்தினி பேரும் கூடி இருந்து குடிக்கறீங்களே! உங்களுக்கு. வெட்கம் மானம், ரோசம் இருக்கான்னு நாங்க கேக்கணும்.

ஐயா!

இடுப்புத் துணி போனது தெரியாமேக் கண்ணு மண்ணு தெரியாமேக் குடிச்சிட்டு; சாக் கடையிலே புழுப்போலே புறண்டுட்டுவேற்ற நீயா என்கிட்டே மானம், மரியாதையைப் பற்றிப் பேசறே!

போலீசைக் கண்டு எங்களுக்குப் பயமில்லே; ஆனா... போவறதுக்கு முந்தி பொன்னியை கை நீட்டி அடிச்ச இந்த ஆளுக்கு ஒரு பாடம் கற்பிக் காமே, போகப்போறதில்லே... என்று கூறிவிட்டு; தன் கூட்டத்தைப் பார்த்து, ''பாரத மாதவுக்கு ஜே?'' என்று ஆவேசமாகக் கத்தினாள்; கடை

யின் முன்னால் குட்டிச் சாத்தனைப்போல் வரிசை யாக வைத்திருந்த கள்ளுப்பானைகளையெல் லாம் தன் கையிலிருந்த கொடிக்கம்பினால் ஓங்கி அடித்து நொறுக்கினாள்.

அவ்வளவுதான்—

பூவாயியின் இந்தச் செய்கையைக் கண்ட கூட்டத்துப் பெண்கள் அனைவரும், மறுகணம் கடைக்குள் புகுந்து நிமிஷ நேரத்தில் தும்சம் செய்து விட்டனர்.

பானைகள் அத்தனையும் உடைத்தெறியப் பட்டு, தரையெங்கும் 'கள்'ளாறு ஓடிக் கொண் டிருந்தது. கடையிலிருந்த பெஞ்சுகள், தாறு மாறாக நொறுக்கப்பட்டு, அந்த வெள்ளத்தில் மிதந்தன.

இமைக்கும் நேரத்தில் இத்தனையும் நடந்து முடிந்து விட்டன.

பிரமித்துப் போய் நின்ற காடையன், அந்த எல்லையை விட்டே வெகுதூரம் சென்றுவிட் டான். அவன் தன்னுடைய கோபத்தையெல் லாம், பண்ணை ஆட்களிடம் கொட்டி, வாய்க்கு வந்தபடி ஏசிக் கொண்டிருந்தான்.

"தூ! நீங்கள்ளாம் ஒரு ஆண்பிள்ளைங்களா? பொம்பளைய அடக்கத் தெரியாதா பேடிங்களா.. நிமிஷ நேரத்திலே ஆயிரம் ரூபாய் கள்ளும்,

கடைச் சாமன்களும் நஷ்டமாயிடுச்சே. யாரு குடுப்பாங்க! நாளைக்கு உங்க அத்தினி பேரையும் போலீசிலே ஒப்படைக்கப்போறேன் பாருங்கோ.'' என்று கோபமாகக் கூறிக்கொண்டே கடையைப் பூட்டிக் கொண்டு வேகமாகப் போனான். காடையன்.

நேரம் கரைந்து கொண்டிருந்தது.

கள்ளுக்கடையின் முன்னால் கூடியிருந்த மற்றவர்கள் எல்லாம் போனபின்பும்; ஆறுமுகம், ராமன், பக்கிரி, தொப்பளான், குப்பன் போன்ற கூட்டாளிகள் மட்டும், அந்த இடத்தை விட்டு நகர மனமில்லாமலோ — அதிகம் குடித்துவிட்டதினால் நகர முடியாமலோ பெரும் கவலையுடன் உட்கார்ந்திருந்தனர்.

அவர்களுடைய கவலைக்கு முக்கிய காரணம், நாளைக்கு, காடையன் கடையைத் திறப்பானா, மாட்டானா என்பதே ஆகும். ஆனால் இப்படியொரு நிலைமை யாரால் ஏற்பட்டது என்று எண்ணிப் பார்த்தபோது, அவர்களது கோபமெல்லாம், ஒன்று திரண்டு பலவேசம் பிள்ளை மீதே தாக்கியது.

'வர வர இந்த பலவேசம், நமக்கு ரொம்ப தொல்லை கொடுக்க ஆரம்பிச்சிட்டாரு அண்ணே' என்று வெறுப்போடு கூறினான் பக்கிரி.

“நமக்குத் தொல்லை தந்தாக் கூடப் பரவா இல்லேடா; இப்படியா பொம்பளைங்களே தூண்டி விட்டு; கள்ளுப்பானைங்களை உடைக்கச் சொல்லறது. நாளைக்கு அவன் முவத்திலே நாம எப்படி முழிக்கறது?” குப்பனுக்கு அழுகையே வந்தது.

“நம்ம முதலாளி ஊருக்குப் பெரிய மனுஷன். அப்படின்னா அதுக்கும் ஒரு ‘மிலிட்’ (லிமிட்) இல்லியா?” தொளப்பன் கேட்டான்.

“இதையெல்லாம் துளுக்கிற போதே, கிள்ளிப் போடணும் அண்ணே” ராமன் கூறினான்.

“ஏன், ஆளையே தீர்த்துக் கட்டிப்பிட்டா என்ன?” மாரி எல்லோரையும் மிஞ்சி விட்டான்.

இதைக் கேட்டதும் ஆறுமுகம் பதறிப்போய், ‘சே...சே...சே. என்னப்பா இது. இவ்வளவு பெரிய பேச்செல்லாம் பேசறீங்க. அவரு அப்படி என்ன செஞ்சுப்பிட்டாரு. நம்மையெல்லாம் குடிக்க வேணாம்னு சொல்லறாரு. நம்மாலே—முடியல்லே; அவ்வளவு தானே,” என்று கேட்டான்.

உடனே சொக்கன், அதைப்பத்தி யாரு அண்ணே இப்போச் சொன்னது. அவரு பண்ணையிலே நாம வேலை செய்றோம்; அவரு

சொல்லறாரு. அதை அவர் நம்மகிட்டேச் சொன்னாப் போதுமில்லே; இதுக்கு நம்ம பொம்பளைங்களை எல்லாம் இழுத்துக் கைக்குள்ளர போட்டுக்கிறது என்ன நியாயம்ங்கறேன்'' என்றான்.

அதற்கு தூபம்போடுவது போலராமனும் — 'குப்பண்ணன் சொல்லறது நூத்துக்கு நூறு நெசம். நீ நல்லா நிதானமா ரோசனை (யோசனை) பண்ணிப்பாரு ஆறுமுகத்தண்ணே. முதல்லே உன்பொஞ்சாதி பூவாயியைப்பிடிச்சாரு; அப்புறம் என் பொண்டாட்டி; இப்போ, என்னடான்னா, நம்ம பண்ணைப் பொம்பளைங்க அத்தினி பேருமே, அவரு கைக்குள்ளாரே. இனிமே, இவளுக நமக்கு அடங்கி நடக்கவா போறாளுவ?''— ராமன் பெருமூச் செறிந்தான்.

''சே...சே... என்னப்பா இது. அப்படியெல்லாம் நீங்க நெனைக்கிற அளவுக்கு பலவேசம் தப்பா போக மாட்டாரு,'' என்று ஆறுமுகம் மறுத்தான். ஆனால் தொளப்பனும், குப்பனும் மாறி மாறி அவனுடைய மனதைப் போட்டுக் குழப்பினார்கள்.

''அண்ணே, நீ ஒரு உலகம் தெரியகத ஆளு. வெளுத்ததெல்லாம், கள்ளுத்தண்ணிதான்னு நம்பிடற ஆளு. நம்ம முதலாளி பொம்பளைங்க விஷயத்திலே ஒரு 'தினுசு' தான் அண்ணே'' என்றான் தொளப்பன்.

உடனே குப்பன், 'நான் நம்ம எஜமான் மேலே கூடத் தப்புச் சொல்மொட்டேன். சம்சாரம் செத்துப் போயி பதினைஞ்சு வருஷமாச்சு. அதிலேருந்து கல்யாணமும் கட்டிக் கிடல்லே. ஒரு மனுஷன் எவ்வளவு நாளைக்குத்தான் யோக்கியனா இருப்பான்? அதுவும் பணம் உள்ளவன் இருப்பானா: அண்ணே?'' என்று ஒத்துப் பாடினான்.

அதற்கு உடனே எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்காமல் ஆறுமுகம் மௌனமாக இருக்கவுமே; அதைத் தனக்கு சாதகமாக்கிக் கொண்டு அல்லது அம்பி நகருகிறது என்பதைப் புரிந்து கொண்டு அடிமேல் அடி அடித்தான்.

''ஆறுமுகத்தண்ணே, நீ நம்பினா நம்பு, இல்லே, விட்டா விடு. ஆனா, உன்னை ஒன்று கேக்கறேன். அன்னிக்கு ஒருநாள், உன் சம்சாரம் பூவாயி, எதையோ சொல்ல அவரு வீட்டுக்குப் போயிருக்கா. அவங்கரெண்டு பேரும் சுவரஸ்யமாப் பேசிக் கிட்டிருந்த போது, நீவற்றதைப் பார்த்தும், அவ்வளவு அவசரமா அவளை ஏன் அண்ணே அவரு உள்ளாரப் போகச் சொல்லி மறைச்சு வைக்கணும்? நீயாரு, அன்னியனா? நல்ல யோசனை பண்ணிப்பாரு அண்ணே!'' சற்று அழுதமான குரலிலேயே ராமன் கூறினான்.

அம்பி நகர்ந்து விட்டது. ஆம்! ஆறுமுகம் யோசிக்கத் துவங்கினன். ''அப்படியும், இவங்க

சொல்றது போலே இருக்குமோ; பூவாயியோடு அழகிலே முதலாளி மயங்கிட்டாரா... இல்லே... பணக்கார முதலாளியை பூவாயிமயக்கிப் பிட்டாளா...

"சும்மா மூளையைப் போட்டுக் குழப்பிக் காதீங்க அண்ணே. ராமன் சொல்லறது அத்தனை யும் நெசம். இல்லேன்னா ஊருப் பொம்பளைங்க மேலே அவருக்கு என்னண்ணே அக்கறை? இதுக்கு இப்பவே ஒரு வழி பண்ணாட்டி நம்முடைய பெண்சாதியை இழந்துட வேண்டியது தான். ஆமாம்...சொல்லிப் பிட்டேன்" என்று ஏதோ ஒரு எச்சரிக்கைபோல் கூறினான் மாயாண்டி.

அதற்கு மேலும் ஆறுமுகத்தினால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. அவன் தன்னை மறந்து கூறினான். "ஆமாம் மாயாண்டி. கண்டிப்பா இந்த பலவேசத்துக்கு புத்திகற்பிச்சுத் தான் ஆகணும். ஆனா... அதுக்கு யாரை அனுப்பலாம்னு தான் யோசிக்கிறேன்"

உடனே குப்பன், "வேறே யாரையும் அனுப்பக் கூடாது அண்ணே. இதுக்கு நீதான் லாயக்கு. உனக்குத்தான் அவரு வீட்டிலே நல்ல பழக்கம் இருக்கு; எல்லா இடமும் தெரியும். அவரு குணமும் நல்லாத் தெரியும். சமயம் பார்த்துக்

காரியத்தை முடிச்சுடு, அம்புறம் நாங்கஇருக்கோம் உன்னைக் காப்பாத்த'' என்றான்

இதைக் கேட்ட ஆறுமுகம் எழுந்து உற்சாகத் தோடு கூறினான்; ''நாளையிலேருந்து நமக்குக்! கள்ளுத் தண்ணி கூட இல்லாமப் பண்ணிப் புட்டார். இனிமே காடையன் கோபம் தணிஞ்சி, சட்டிப் பானைவாங்கி, கடையை நோக்கி சரக்கு சேகரிச்சு, என்னிக்குத் திறப்பானோ ஆனா நமக்கு இத்தினி கஷ்டத்தை உண்டாகின பலவேசத்துக்கு இன்னிக்கு ரவக்கே முடிவு கட்டிடறேன். நளைக்கு கருக்கல்லே, எல்லோரும் சவுக்கத் தோப்பு வந்துடுங்க. விஷயம் சொல் றேன்'' என்றான்.

ஆறுமுகத்தினுடைய இந்தத் தீர்மானமான முடிவைக் கேட்டதும் அனைவரும் மகிழ்ந்துபோய் ''இன்னிக்கோட நம்ம முதலாளி குளோஸ்''என்று உற்சாகத்துடன் முனகிக்கொண்டு கலைந்து சென்றனர்.

# 5

"ஒரு மனிதனிடமுள்ள தெய்வீகத்தன்மை, புகழ், உயர் குணம் போன்ற ஒவ்வொன்றையும் மதுவானது கீழ்மைப்படுத்தி சிதைத்து ஒழிப்ப தோடு; தீங்கானவை, கேவலமானவை, கபடானவை என்கிற அனைத்தையுமே மது ஒரு வனுக்குப் புகட்டாமல் விட்டு விடுவதில்லை."

—ஜான் பி-காஃப்

மறுநாள் அதிகாலை நேரம். வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. மேகத்தினுள் சிக்கிக் கொண்ட சூரியன், வெளியே வரவே பயப்பட்டுக் கொண்டிருந்தான். இடும்பன் மலைச்சாரலை ஒட்டிய வடக்குப் பாகத்திலுள்ள சவுக்கைத் தோப்பில் ஆறுமுகத்தின் நண்பர்கள் எல்லாம் வந்து கூடி வெகுநேரமாகிவிட்டது. ஆனால், காரியத்தை முடித்துவிட்டு கருக்கலிலேயே வந்து விடுவதாகக் கூறிய ஆறுமுகத்தை மட்டும் இன்னும் காணோம்.

இது கூடியிருந்தவர்கள் உள்ளத்தில் பெரும் கவலையையும், பயத்தையும் மூட்டியது.

"ஏன் கருப்பண்ணே; இன்னும் ஆறுமுகத்தைக் காணோம்?" என்று கவலையோடு கேட்டான் சொக்கன்.

'போன இடத்திலே, எதினாச்சும், இசை கேடா அண்ணன் மாட்டிக்கிட்டிருக்குமோ?''

''சே! அப்படியெல்லாம் இருக்காது. ஆறு முகம் கில்லாடி. நெனச்சா அந்தக் காரியத்தை முடிக்காமே வரமாட்டான்'' என்றான் பக்கிரி.

இப்படி இவர்கள் கவலையும் சமாதானமு மாய்ப் பேசிக் கொண்டிருக்கும்போது, தள்ளாடிய படி முகத்தில்—அந்த அதிகாலை வேளையிலும்—வியர்வை வழிந்தபடி ஆறுமுகம் அங்கு வந்து சேர்ந்தான்.

அவனுடைய கோலத்தைக் கண்டு, அங்கு கூடி இருந்த அனைவரும் பதறிப் போயினர்.

''என்னண்ணே, மூஞ்சியெல்லாம் வெளிறிப் போய் கிடக்கு. உடம்பு வெடவெடக்குது. ரவிக் குப்போன காரியம் என்ன ஆச்சு அண்ணே?'' கவலையோடு விசாரித்தான் பக்கிரி.

''தம்பி...! அது ஒரு பெரிய கதை! நான் ஒண்ணு நெனைக்க தெய்வம் ஒண்ணு நெனச் சிடுச்சு. கையிலிருந்த கட்டையாலே ஆளைப் போட்டு நொறுக்கிட்டுப் பார்த்தா...'' ஆறுமுகம் குரல் தடுமாறியது.

''ஏன் அண்ணே! முதலாளியை ஒரேயடியா ஊருக்கு அனுப்பிட்டியா?'' அனைவருடைய முகத்திலும் கவலைக் குறி தோன்றியது; பயந்து

போய் சடையன் கேட்டான்; "ஆரம்பத்தி லேருந்து என்ன நடந்ததுன்னு சொல்லு அண்ணே."

ஆறுமுகம் திக்கித் திணறி கூறிக்கொண்டே வந்தான்.

"நான் ராத்திரியே புல் லோடிலே பல வேசம் பிள்ளையோடு வீட்டு மொட்டை மாடி யிலே போய் பதுங்கிட்டேன். நல்ல நடுநிசியிருக் கும்.

மாடியிலே முதலாளி எந்த அறையிலே படுத் திருப்பாருன்னு எனக்குத் தெரியும். நான் மெள்ள கீழ்மாடிக்கு எறங்கி, அவரு படுத்திருக்கிற இடத் துக்குப் போனேன்.

விளக்கு மங்கலா எரிஞ்சிக் கிட்டு இருத்திது. எங்கும் ஒரே நிசப்தம். கடியாரத்திலே மணி கட கடன்னு அடிக்கத் தொடங்கியதும், 'கபால்னு' ஓரமாப் பதுங்கி கினேன். சனியன் பிடிச்சுது பனிரெண்டு வாட்டி அடிச்சுது. நல்ல காலம் அப்படியும் அவரு அசஞ்சு படுக்கல்லே. நல்லா தூங்காராருன்னு சந்தோஷப்பட்டுக் கிட்டேன்.

மெல்ல, அடிமேலே அடி எடுத்து வெச்சு; என் உடம்பை எல்லாம் போர்வையாலே மூடிக்கிட்டு, மெதுவா ரூமுக்குள்ளாரே நுழைஞ்சிட்டேன். ரூமிலே போட்டிருந்த கட்டில் மேலே, கால்

லேருந்து தலை வரை மூடிக்கிட்டு முதலாளி சுகமாத் தூங்கிக் கிட்டிருந்தாரு.

இதுதான் சமயம்னு நெனச்சு, முதல் அடியை நல்லாத் தலைமேலே குறி பார்த்து அடிச்சேன். அதைத் தொடர்ந்து, உச்சி முதல் உள்ளங்கால் வரை, உருளைக் கட்டையாலே விளாசு —விளா சுன்னு விளா சினேன்,'' என்று ஆறுமுகம் — சுவாரஸ்வயமாகக் கூறிக் கொண்டே வரும்போது, குப்பன் இடை மறித்துக் கேட்டான். 'ஏன் அண்ணே! முதல் அடியே பொட்டுமேலே பட்டு, ஆள் அவுட்டாயிட்டாரா? இத்தினி அடிக்கும் சத்தம் — போடவே இல்லியா?'

முழுக்கக் கேளுடா குப்பா. ''உன்னைப் — போலேதான் முதல்லே நினைச்சேன். இருந் தாலும் சத்தம் போட்டு, ஊரைக் கூட்டவோ; என்னை -லபக்னு அவரு பிடிச்சுடவோ கூடாதேங் கிற பயத்திலே மேலே மேலே நான் அடிச்சுட்டுத் திரும்பற போது, 'கபால்னு' என்னை ஒரு இரும்புக்கரம் திணற முடியாதபடித் பிடிச்சுட்டுது. நான் பயந்து போய்த் திரும்பிப் பார்த்தா பல வேசம் பிள்ளை சிரிச்சபடி என்பக்கத்திலே நின்றுக்கிட்டு இருக்காரு.''

''அப்போ, கட்டிலே படுத்திருந்த யாரை அண்ணே நீ தடியாலே அடிச்சே?'' முருகன் ஆவலை அடக்க முடியாமல் கேட்டான்.

ஆறுமுகம் அவனை முறைத்தபடி, "முழுக்கச் சொல்லித் தொலைக்கறேனேடா; அதுக்குள்ளரே அவசரமா? முதலாளி ஒரு கையாலே, என் மேலே மூடியிருந்த போர்வைப் பிடிங்கி எறிஞ்சிட்டு, 'ஏண்டா ஆறுமுகம் அன்னிக்குத்தான் போதையிலே, சேர்வைன்னும், அவரு ஆளுங் கன்னும் நினைச்சுக்கிட்டு தோட்டத்து வாழையை எல்லாம் வெட்டிச் சாச்சே. இன்னிக்காவது குடிக்காமெ வத்திருக்கப் படாதா! போர்வைக்குள்ளாரே நான் படுக்க வெச்சிருந்த, திண்டு தலைகாணியையெல்லாம் போட்டு, தும்சம் பண்ணிட்டியே. ஏண்டா ஆறுமுகம், என்னை அடிக்கணும்னு, உனக்கு ஆசையோ, ஆத்திரமோ இருந்தா! அதுக்கு இவ்வளவு கஷடப்பட்டு, கண்ணு முழிச்சு திருட்டுத் தனமா வந்திருக்க வேணாமேடா. பகல்லேயே தாராளமா நீ வந்து அடிச்சுப் போட்டுட்டுப் போகலமே. என்னை அடிக்க உனக்கு இல்லாத உரிமையா?" அப்படீன்னு அவரு பேசப் பேச, நான் பயந்து போயி, அங்கிருந்து தப்பிச்க ஓடப் போன போது, வேலைக்கார ரங்கன் என்னைப் பாய்ஞ்சு பிடிச்சு நிறுத்தி, 'எஜமான் இந்த நன்றி கெட்ட நாயை போலீசிலே ஒப்படைச்சு நல்ல பாடம் கத்துக் கொடுத்து அனுப்பணும் எஜமான்,' என்று தூணலே கட்டப் போன போது, எஜமான் அவன் கிட்டே, "வேண்டாம் ரங்கா! ஆறுமுகத்தை விட்டுடு. பாவம், அவன் போகட்டும்," ன்னு சொல்விட்டாரு — என்று கூறிய ஆறுமுகம்,

'இதைத்தாண்டா பக்கிரி, என்னாலே தாங்கவே முடியல்லே. கோவத்திலே அவரு, பத்து அடி அடிச்சிருந்தாக்கூடத் தேவலாம்போலத் தோணிச்சு,' என்றான் ஆறுமுகம்.

உடனே தொப்பளான் குறுக்கிட்டு, 'அண்ணே! இதையெல்லாம் நீ நம்பறயா? அண்ணே, இதெல்லாம் வெறும் வேசம். உன்னை அவரு கை நீட்டி அடிச்சா, அவரும் போலீசுக்கு பதில் சொல்லி ஆவணும் இல்லே; அதுனாலே, உன்னை விடற மாதிரி வுட்டுட்டு, நம்ம அத்தினி பேரையுமே, போலீசிலே மாட்டி வுடத்தான் இப்படி சூழ்ச்சி பண்ணி இருக்காரு. பாத்துக்கிட்டே இரு; மதியத்துக்குள்ளாரே போலீசுப் பட்டாளம் நம்ம குப்பத்தைச் சூழ்ந்துக்கப் போவுது'' என்று பயந்து நடுங்கிய படியே கூறினான்.

தொளப்பானுடைய இந்த வார்த்தைகளைக் கேட்டதும், மற்றவர்களையும் போலீஸ் பயம் பற்றிக் கொண்டு விட்டதுபோல, எல்லோரும் ஏக காலத்தில் கூறினார்கள்.

'அண்ணே; நீ இப்படிக் காரியத்தைக் கோட்டைவிட்டுட்டு வந்திட்டியே. உன்னாலே இப்போ நாங்க எல்லாம் கூண்டோடு மாட்டிக்கப் போறோம்.'

ஆறுமுகத்திற்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. 'அட, தொடை நடுங்கிங்களா! அப்ப

என்னமோ வீராவேசமாப் பேசி என்னை அனுப்பி வெச்சிங்க. இப்ப எதுக்குடா இப்படிப் பயந்து சாகறீங்க. நல்லதோ, கெட்டதோ, எதுக்கும் நானே பொறுப்பு ஏத்துக்கறேண்டா. உங்களையெல்லாம் காட்டிக்குடுத்திட மாட்டேன்; கவலைப் படாதீங்க,' என்று கூறியவன் ராமன் பக்கம் திரும்பி, பரிதாபமாகக் கூறினான்.

'ராமா, நடந்தது என்னமோ நடந்து போச்சு. இந்தவிஷயத்தை இத்தோடு மறந்துடுங்க. ஆனா ஒண்ணு; நான் இன்னும்ரெண்டு நாளைக்கு வீட்டுப்பக்கமே தலைகாட்ட முடியாது. பூவாயிக்கு விஷயம் தெரிஞ்சா ரகளைபண்ணிப் புடுவா. எனக்கும் மனசுக்குச் சமாதானம் ஆகணும். அதனாலே இன்னிக்கு ரவைக்கு, பாவாடையைப் புடிச்சு, நீதான் எனக்கு 'சரக்கு' சப்ளை பண்ணணும். சொல்லிப்புட்டேன்' என்று கூறி நிறுத்தினான்.

ஆறுமுகத்தின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் ராமன் பதறிப் போனான்.

'அண்ணே, என்கிட்டே அம்புட்டுக்கு காசு ஏது அண்ணே. கள்ளுக்கடை வேறே இல்லேன்னா, பாவாடையைக் கையாலேயே புடிக்க முடியாது. அவன் சொல்ற விலைதான்.'

'நீ என்ன பண்ணுவியோ; ஏது பண்ணுவியோ, நம்ம தோஸ்துகளுக்கு நீதான் இன்னிக்கு

தண்ணி ஊத்தப் போறே. மஜாவா—பழசை யெல்லாம் மறந்து, ஆனந்தமாக் குடிக்க ணும். நாங்க ஐந்து பேரும் ரவக்கி இங்கே உனக்காகக் காத்துக்கிட்டு இருப்போம். ஏமாத்திபிடாதே; சொல்லிவிபிட்டேன்,' என்று கெஞ்சாக் குறையாகக் கூறினான் ஆறுமுகம்.

அதற்கு மேலும் ஏதும் பேச மனமின்றி, வழி நெடுக யோசனை செய்தபடியே ராமன் வீட்டை நோக்கி நடந்தான்.

## 6

"மனித சமுதாயத்தின் ஒவ்வொரு துறையையும் மதுக்கெடுகிறது."

—தி ரோசானாவ்ஸ்.

ஆறுமுகத்தைத் தவிர மற்றவர்கள் எல்லாம் பகலில் வேலைக்குப்போய்விட்டு, இருட்டியதும், குறிப்பிட்டபடியே சவுக்குத்தோப்பிற்கு வந்துவிட்டனர். அங்கேயே பழிகிடக்கும் ஆறுமுகம், பகல் முழுவதும் பட்டினி. இரவும் வந்து; நண்பர்களும் வந்துவிடவே, அவனுடைய மனம் ஒவ்வொரு நிமிஷமும் ராமனுடைய வருகைக்காக ஏங்கிக் கொண்டிருந்தது.

"இன்னும் ராமனைக் காணோமே; காசு போட்டு, சாராயம் வாங்கிவாடா'ன்னு சொன்ன

துக்காக, பயந்து மட்டம் போட்டானா,'' என்று ஆறுமுகம் அடிக்கொருதரம் புலம்பிக்கொண்டிருந்தான்.

'சே.,சே..! அப்படியெல்லாம் ராமன் உன் விஷயத்திலே நடந்துக்க மாட்டான் அண்ணே எப்படியும் வந்துடுவான்' என்று சமாதானப் படுத்தினான் பக்கிரி.

'ஒருவேளை, பெண்சாதி புடிச்சு நிறுத்தி வெச்சுப் பிட்டாளோ...' என்று சந்தேகத்தைக் கிளப்பினான் குப்பன்.

'என்னமோ தெரியலியே...' என்று எல்லோரும் பேசிக் கொண்டிருக்கும்போதே, ராமன் ஒரு பை நிறைய பாட்டிலுடன்—தோட்டத்திற்குள் வந்து நின்றான்.

அவனைக் கண்டதும் ஆறுமுகம் சந்தோஷ மிகுதியால், கட்டி அணைத்தபடி, 'வா...வா' என்று வரவேற்றான். பை நிறைய அவன் கொண்டு வந்திருக்கும் சரக்கைப் பார்த்த பிறகு தான், சோர்ந்துகிடந்த ஆறுமுகத்திற்கு உற்சாகம் பிறந்தது.

'ஏண்டா ராமர்; இம்மான் நேரம்?' என்று வாஞ்சையுடன் கேட்ட ஆறுமுகத்தினிடம், 'உன்னாலே நான் ரொம்ப ரோதனைபட்டுப் போனேன். அண்ணே,' என்றான் மிகவும் சலித்துக் கொண்டபடி.

'என்னாலியா? அப்படி நான் என்னடா பண்ணிப்பிட்டேன்,' என்றான் ஆறுமுகம் பையிலிருந்த பாட்டில்களை ஒவ்வொன்றாய் எடுத்து வெளியே வைத்தபடி.

'ஆமாம் அண்ணே. நேத்திப் பூரா உன்னை வீட்டுப் பக்கமே காணோம்னு பூவாயி தவியாயத் தவிச்சுப் போயி; பிள்ளையையும் தூக்கிக்கிட்டு என் வீட்டுக்கு வந்துட்டா.'

'ஏனாம்?'—

'என் வீட்டிலே, நீ இருக்கியோன்னு வேவு பார்த்துட்டுப் போகத்தான். என் பெண்சாதிக்கு ஒண்ணும் தெரியாது; அது திருதிருன்னு முழிக்கிது. ஆனா...பூவாயிக்கு, உன் மொத்த விஷயமும் எப்படியோ தெரிஞ்சு போச்சுது அண்ணே!' என்றான் ராமன் வியப்போடு.

'அதுக்கு என்ன செய்யணும்கறாளாம் அவ?' என்றான் ஆறுமுகம் அலட்சியமாகப் பாட்டிலை எல்லோருக்கும் வினியோகித்தபடி.

'அவ ரொம்ப பயந்து சாகறா' என்றான் ராமன்.

'எதுக்காம்! எங்கே அவளை கொன்று, தின்று போடுவேனோன்னா?'

'அதில்லே. நீ எங்கேயாவது, போலீசுலே... கிலீசிலே மாட்டிக்கிட்டியோன்னுதான் மாஞ்சு போவுது'

'அடேயப்பா அக்கரையைப் பாருடா?' அரை பாட்டுலுக்கு மேல், மடமடவென்று குடித்துத் தீர்த்தான் ஆறுமுகம்.

ராமன் மெல்லக் கூறினான்; 'அக்கரை இருக்காதா அண்ணே! என்ன இருந்தாலும் தாலி கட்டின புருஷனாச்சே'

ஆறுமுகத்திற்கு கோபமே வந்துவிட்டது.

'சரிதான், விடுடா கழுதையை. ஆமாம், வற்ற போதே ஏதோ விசனமாச் சொல்லிக்கிட்டு வந்தியே; என்ன விஷயம்?'

'ஒண்ணுமில்லே அண்ணே! என்னிக்கும் கேக்காத நீ கேட்டுப்பிட்டே. நான் இன்னிக்கி ஒரு தப்பான காரியம் செஞ்சுப்புட்டேன். அத்தே முடிச்சிக்கிட்டு; சரக்கு வாங்கிவர நேரமாயிடுச்சு. அதுதான்.'

'என்னடா இது. புதிரு புதிராப் போடறே! கொஞ்சம் புரியும்படிச் சொல்லித் தொலைடா' ஆறுமுகம் உளறினான்.

ராமன் முழுவிவரத்தையும் கூறினான்: 'அண்ணோ, பொறுப்பை நீ என் தலைமேலே போட்டுட்டே, என் கையிலியோ காசு இல்லே; எல்லாருக்கும் சேர்த்துக் கொண்டான்னா நான் எங்கே போவேன்?

'பொன்னிக்குத் தெரியாமெ, அவ பெட்டியிலே இருந்து வெள்ளிக் கொலுசை எடுத்து மார்வாடி கடையிலே வெச்சு, சரக்கு வாங்கி வந்திருக்கேன். பொன்னிக்குத் தெரிஞ்சா உசிரையே வுட்டுடுவா'.

'கவலைப் படாதே குப்பா...'

'நான் குப்பன் இல்லே அண்ணே; ராமன். அவன் கழுத்தைச் சுற்றித் தன் வலக்கையைப் போட்டுக் கொண்டபடி, 'நல்ல உசத்திச் சரக்கா வாங்கியாந்திருக்கே ராமா. கவலைப்படாதே; வேலைக்குப் போயி பணம் கிடைச்சதும், முதல்லே... உன் கடனைத் தீர்த்துப்புட்டுத்தான் மறு சோலி' என்றான் ஆறுமுகம்.

'அத்தப்பத்தி இப்போ என்ன அண்ணே? சும்மா அலட்டிக்காமெ; நிம்மதியாச் சாப்பிடு என்று ராமன் சமாதானப் படுத்திக் கொண்டிருக்கும்போதே, சுப்பன் குறுக்கிட்டு, 'அண்ணே, அந்தச் பொட்டைப் படைங்க இன்னிக்கும் கலாட்டாப் பண்ண வந்தாலும் வரும். கள்ளுக் கடையிலே காணோம்னா, சவுக்குத் தோப்புக்குப் போயிருப்பேன்னு எம்பெண்சாதிக்குத் தெரியும். அவ எல்லாப் பட்டாளத்தையும் இழுத்துக்கிட்டு, இங்கே வந்தாலும் வந்துடுவாளுக, நாம சீக்கிரமா இங்கிருந்து போயிடணும்' என்று ஒரு எச்சரிக்கை போல் கூறினான்.

இதைக் கேட்ட பக்கிரி கோபத்தோடு, தன் இடுப்பிலிருந்த அரிவாளை உயர்த்திக் காட்டினான்:

'வந்துடுவாளுகளா? இன்னிக்கு எல்லாத்துக்கும் தயாராகத்தான் வந்திருக்கேன். சும்மா; ஒரே சீவு...' என்றான்.

'சீ...! விடுங்கடா அந்தப் பொட்டைங்க பேச்சை. போட்டதெல்லாம் போன இடம் தெரியல்லே; இன்னொரு புட்டி குடுடா, ராம', என்று அவன் கையைப் பிடித்திழுத்தான்.

ராமன் பயந்து போனான்: 'என்னண்ணே, இது! நாலு புட்டியாச்சே... தாங்குமா?'

'சும்மா குடுடா; எல்லாம் தாங்கும். இந்த ஆறுமுகத்தை நீ என்னா நினைச்சுக்கிட்டே', என்று அவனாகவே பிடுங்கி குடிக்கத் துவங்கி விட்டான்.

திருப்தியே ஏற்படாததுபோல் குடித்துக் கொண்டிருந்த ஆறுமுகம், 'ரொம்ப ஓஸ்த்தி சரக்குடா பக்கிரி; ஆளை ஒரே முட்டாத் தூக்குது: நெதக்கும் இப்படி வாங்கிக் கொடுப்பியா பக்கிரி அண்ணே', என்று கெஞ்சினான்.

'போதும்ண்ணே, குடிச்சிது; பாட்டிலைக் குடுத்திடு.' தட்டாமாலை சுற்றிக் கொண்டிருந்த ஆறுமுகத்திடம் ராமன் கெஞ்சினான்.

'என்னைக் குடிக்காதேன்னு சொல்ல நீ யாரடா; உனக்கு என்னா ரைட்டு இருக்குன்னு கேக்கறேன்? என் ராமன் வாங்கிக் குடுத்தான். நான் குடிப்பேன்; கொட்டுவேன்; உடைப்பேன்; பேசினா உதைப்பேன்.'

"நான் தாண்ணே ராமன்"

ஆறுமுகம் கபால்னு, துண்டோடு சேர்த்து ராமனின் கழுத்தை ஒற்றைக் கையால் இறுக்கப் பிடித்துக் கொண்டான்? வலக்கையில் பாட்டில் தளும்பிக் கொண்டிருந்தது.

"டேய்... நீயா ராமன்? எங்கேடா உன் கையிலே வில்லு இருக்குது? பக்கத்திலே சீதை யில்லே. லட்சுமணர் இல்லே. குடிபோதையிலே இருக்கேன்னு நினைச்சு ஏமாத்திறியா! உன்னை யாருன்னு எனக்குத் தெரியும்."

கழுத்தின் இறுக்கம் தாளாமல் ராமன் தவித்தான். 'நான் ராமன் தான் அண்ணே; நல்லாப் பாரு.'

'ஏண்டா! என்னைப் பொட்டையன்னு நினைச்சிட்டியா; என் ராமனை எனக்குத் தெரியாது. நீ ராமன் இல்லே; ராவணன். என் குடியைக் கெடுக்க வந்த பலவேசம். இப்ப வசமா நீ எங்கிட்டே மாட்டிக்கிட்டே. அன்னிக்குப் போலெ தலையாணியைக் காட்டி ஏமாத்த முடியாது. உன்னையும் அந்தச் சிறுக்கியையும் எம

லோவத்துக்கு அனுப்பலேன்னா எம்பேரு... எம் பேரு... ஆ! அத்தப்பத்தி என்ன—இந்தா வாங் கிக்க வட்டியும் முதலுமா!' —கையிலிருந்த பாட்டி லால் ஓங்கி ஆறுமுகம் ராமனது தலையில் அடித்து விட்டு இரு கைகளாலும் அவனது கழுத்தைப் பிடித்து நெரித்தான்.

ராமன் 'ஐய்யோ—ஐயோ' என்று அவலமாக கத்தினான்.

கொஞ்சம் நிதானத்திலிருந்த சுப்பனும், குப்ப னும் ஓடிவந்து 'அண்ணே, அண்ணே—இது பலவேசம் இல்லே, நமக்குச் சாராயம் வாங்கிக் குடுத்த ராமன்... ராமன்' என்று விலக்கினர்.

ராமன் வலிதாள மாட்டாமல், தரையில் கிடந்து நெளிந்தான். தலையில் ரத்தம் பெருக் கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது. அந்தக் குடி மயக்கத்திலும் மற்றவர்களுக்கு ஓரளவு நிலைமை விளங்கி விட்டது. ராமனைத் தோளில் தூக்கி சார்த்தியபடி, வைத்தியரது வீட்டை நோக்கி குப்பன் ஓட்டமும் நடையுமாக முன்னே சென் றான். மற்றவர்களும் அவனைப் பின் தொடர்ந் தனர்.

'தூ...! கையாலாகாத கபோதிப் பசங்களா! எல்லாப் பசங்களும், கட்சி மாறிப் பசங்க. காசுக்கு ஆசைப்பட்டு, பலவேசத்தை வீட்டுக்குத் தூக்கிக்

கிட்டுப் போறீங்களா? இருங்கடா; எனக்கே விரோதமாக் கிளம்பிட்ட எல்லோரையும் ஒரு கை பாத்துடறேன். இந்த ஆறுமுகத்துக்கு ஜெயில் அனாவசியம்.

அவர்கள் சென்ற திசையை நோக்கிக் கத்திக் கத்தி ஆறுமுகம் அங்கேயே ஒரு சக்கர வளைய மடித்து தரையில் சுருண்டு விழுந்தான்.

## 7

*"எந்த யுத்தமும், பிளேக் காலரா, க்ஷய ரோகம், பஞ்சம் முதலியவையும் இவ்வளவு பேர்களை அழித்ததில்லை; இவ்வளவு வறுமை, துயரம், சாவைத் தந்ததில்லை. இவற்றைத் தந்தது மதுதான்!"*

*— சார்லஸ் டார்வில்,*

ராமனைத் தூக்கிச் சென்றவர்கள், வைத்தியர் வீட்டை அடையும் போது, அவர் படுக்கையைத் தட்டிக்கொண்டிருந்தார். தன்னை யாரோ அழைக்கிற குரல் கேட்டு வாசலுக்கு வந்தார். திண்ணையில் போடப்பட்டிருந்த பெஞ்சி மீது ராமனைக் கிடத்தி இருந்தனர். செய்தியைக் கேட்டறிந்து கொண்ட வைத்தியர் அவசரமாக சில பச்சிலைகளை அரைத்து ஒரு களிம்பு தயார்

செய்து அதை அடிபட்ட காயத்தின் மீது வைத்து கட்டுப் போட்டார்.

உள்ளுக்குச் சாப்பிட ஒரு கஷாயத்தையும் ராமன் வாயில் ஊற்றினார். 'இன்னும் கொஞ்ச நாழிலே வலி நின்னு, மயக்கம் தெளிஞ்சிடும். வீட்டிலே கொண்டு போய் படுக்க வையுங்க. காலமே வந்து வேறே கஷாயம் வாங்கிட்டுப் போங்க' என்று அனுப்பி வைத்தார்.

பாதிவழியிலேயே ராமனுக்கு நன்றாக நினைவு வந்து விட்டது. வீட்டிற்கு நான் நடந்து போய்க் கொள்கிறேன் என்ற வார்த்தையை அவனது நண்பர்கள் கேட்கவில்லை.

மத்தியானம் சிரித்துப் பேசிச் சாப்பிட்டு விட்டுச் சென்ற புருஷனை, நாலுபேர் சுமந்து வந்து வீட்டிற்குள் கிடத்தியதையும்; தலையில் போடப்பட்டிருந்த பெரிய கட்டையும் பார்த்து பொன்னி பதறிப் போனாள்.

'பலவேசம் பிள்ளைன்னு நெனைச்சிக்கிட்டு, ஆறுமுகத் தண்ணன், ராமனை அடிச்சுப் பிட்டது,' என்பதைத் தவிர அவர்கள் வேறு ஒரு தகவலும் சொல்லவில்லை.

பொன்னி பெரிசாக அழுதாள்.

''வைத்தியரய்யா மருந்து வெச்சுக் கட்டி; கஷாயமும் கொடுத்திட்டாரு. பயப்பட ஒண்ணு மில்லேன்னாரு'' என்று அவனுக்கு ஆறுதலான வார்த்தையும் கூறிவிட்டு, வந்தவர்கள் போய்விட்டார்கள்.

ராமனுக்கு மயக்கம் தெளிவதும்; மீண்டும் மயங்குவதுமாக இருந்தான்.

நினைவு திரும்பும் போதெல்லாம், ''அந்தப் பாவி கூடச் சேராதேன்னு அடிச்சிக்கிட்டேனே; என் பேச்சைக் கேட்டியா?'' என்று தன் புருஷனிடம் பொன்னி புலம்பினாள்.

'இப்படி ஒரு குடி கேக்குதா! பாவி உன்னை ஒரேயடியாக் கொன்னு போட்டிருந்தா நானும் புள்ளங்களும் தெருவிலே நிக்க வேண்டி வருமே. எங்களுக்கு யாரு ஒருவாய் கஞ்சித்தண்ணி ஊத்து வாங்க?' என்று அவன் தலையை வருடியபடி அழுதாள்.

இந்த அனியாயத்தை உடனே பூவாயியிடம் போய்ச் சொல்லி ஒரு குரல் அழுதால்தான் அவள் மனசுக்கு ஆறுதல் ஏற்படும் போல் இருந்தது.

'எல்லாம் விடிஞ்சு பாத்துக்கலாம்' என்று ராமன் தடுத்தான். அவள் கேட்கவில்லை.

புள்ளைங்களை எழுப்பிப் புருஷன் தலைமாட்டில் உட்கார வைத்துவிட்டு, அடங்காத துயரத்

துடனும்; கட்டுக்கடங்காத கோபத்துடனும் பூவாயியின் வீட்டை நோக்கி நடந்தாள்.

## 8

"மதுவிளைவித்த பழிபாவங்களை நினைத்தும், அது குட்டிச்சுவராக்கிய குடும்பங்களை நினைத்தும், இன்னும் பெண்கள், குழந்தைகள், மூதியோர் போன்றவர்களுக்கு அது விளைவித்துள்ள கொடுமைகளை நினைத்தும், அது உடைத்து நொறுக்கிய இதயங்களை நினைத்தும் நான் மதுவை எப்போதுமே வெறுக்கிறேன்"—

—இந்தியாவின் மாஜி கவர்னர் ஹான்லி.

அவசரம் அவசரமாக வீட்டுக் காரியங்களை முடித்துக் கொண்டிருந்தாள் பூவாயி. மகளுக்குச் சாதத்தைப் போட்டுத் தூங்க வைத்து விட்டு, அவளும் பேருக்கு பிடிசோற்றை அள்ளித் தட்டில் போட்டுக்கொண்டு சாப்பிடத் துவங்கும்போது, 'அப்பா இன்னிக்கும் வீட்டுக்கு வர மாட்டாரா அம்மா?' என்று கேட்டுக்கொண்டே அவளது நாலு வயதுக் குழந்தை மீனாக்ஷி அருகில் வந்து நின்றாள்.

'நீ இன்னும் தூங்கலியாடா கண்ணா; போய் படு. அப்பாரு வந்துருவாரு,' என்று அவளைச் சமாதானம் பண்ணிப் படுக்கச் சொன்னாள்.

'நான் அப்பாரு வந்தப் புறமா; அவருகூடத் தான் தூங்கப் போறேன்' என்று ஒரு தீர்மானம் போல் கூறிவிட்டு, தாயாரின் பக்கத்திலேயே உட் கார்ந்து விட்டாள்.

கண்ணம்மா அவர்களுக்கு ஒரே மகள். செல் லப்பெண். 'பாவி, புள்ளையைக் கூடப் பார்க்க வராமே, ரெண்டு நாளாக் குடிச்சிட்டு, எங்கயோ விழுந்து கிடக்கானே?

நினைக்க நினைக்க அவளுக்குத் துக்கமாக வந்தது. சாப்பிட்டதாகப் பெயர் பண்ணிவிட்டு, அவசரமாக அடுப்பங்கரைக் காரியங்களை முடித்துக் கொண்டிருந்தபோது, வாசல் கதவை யாரோ படபடவென்று தட்டுகிற சப்தம் கேட்டது.

'அம்மா அப்பாரு வந்துட்டாரு' — என்று கண்ணம்மா ஜோசியம் சொன்னாள்.

'இரு நான் போயிப் பார்க்கறேன்', என்று அவள் கைகழுவி விட்டு வருவதற்குள், கழியால் யாரோ கதவை ஓங்கித் தட்டிக் கொண்டே இருந் தார்கள். 'யாரு?' என்று கேட்டாள் பதில் இல்லை.

கதவைத் திறந்தபோது, தாயை முந்திக் கொண்டு மகள் முன்னே போய் நின்றாள். அங்கே—

கையில் ஒரு நீண்ட கழியுடனும்; விழிகளில் கோபத்துடனும் ஆறுமுகம் நின்று கொண்டிருந்தான்.

'எம்மாந் நேரம் தட்டறேன்; உள்ளாரே என்னடி பண்ணறே?'

'யாரு...ன்னு கேட்டா; பதில் சொன்னாத் தானே!''

'ஏண்டி மூஞ்சியை சுணுக்கறே! நான் இல்லாமே இந்த வீட்டுக் கதவை எவன்டி தட்டுவான்? பலவேசம்னு நினைச்சியா?'

'சீ... வாயைக் கழுவு...' கோபத்தோடு எரித்து விடுபவள் போல் பார்த்து விட்டு, குழந்தையைத் தூக்கிக் கொண்டு உள்ளே வந்தாள்.

'என்னடி, பாஞ்சாலி வேசம் போடறே! எனக்கு உன் சங்கதி எல்லாம் தெரிஞ்சு போச்சுடீ' கள்ளுக்கடை வாசல்லே, ஒவ்வொருத்தனும் காறித் துப்பறான்.''

''ஆமாம்—கள்ளுக் கடை வாசல்லே—தானே? நீங்க வேறே எங்கே கூடிப் பேசிப்பீங்க? குடிச்சிட்டு உளறாதே; எனக்கு உன் யோக்யதை எல்லாம் புரிஞ்சுப் போச்சு. உண்ட வீட்டுக்கு ரெண்டகம் நினைக்கிற பாவி. நம்ம எஜமான் கொஞ்சம்

உஷாரா இல்லாட்டி; நேத்தி ரவக்கி அவரைக் கொன்னு போட்டிருப்பியே. ஏன்ய்யா, உனக்கு இந்த கெடு புத்தி?'

ஆறுமுகத்திற்கு பொசுக்கென்று கோபம் வந்தது. 'அத்தெக் கேக்க நீ யாருடி? இப்பக்கூட அந்தப் பலவேசத்தைச் சவுக்குத் தோப்பிலே கழுத்தை நெரிச்சுப் போட்டுத்தான் வந்திருக் கேன். நல்லா, வசமா மாட்டிக் கிட்டான். அடிச்ச அடியிலே ஆளையே தீர்த்திருப்பேன்—இந்த கட்சி மாறிப் பசங்க குறுக்கே புகுந்து காரியத்தைக் கெடுத்துட்டானுக. இல்லாட்டி...' என்று ஆறு முகம் பேசிக் கொண்டே போவதைக் கேட்டு பூவாயி ஒருகணம் பதறிப் போனாள்.

''அடப்பாவி...அதுக்குத்தான் ரெண்டு நாளா. வீட்டுப்பக்கம் கூடத் தலை காட்டாமே, தலை மறைவா சுத்திக்கிட்டிருந்தியா? பாவி... நீ உருப் பிடுவியா! உன்னை அவரு அன்னிக்கே போலீ சிலே பிடிச்சுக் கொடுத்திருந்தா; அந்த நல்ல மனுஷனுக்கு இந்த கதி வந்திருக்குமா! ஐயோ... நான் இப்போ என்னத்தேச் செய்வேன்... அவரு மொவத்திலே போயி எப்படி முழிப்பேன்...'' என்று பூவாயி அழுதபோது ஆறுமுகத்திற்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

எட்டி அவள் தலை மயிரை கொத்தாய்க் கையில் பிடித்துக் கொண்டான். குழந்தை

மீனாட்சி பயந்து போய், தாயின் கால்களைக் கட்டிக் கொண்டு அழுதது.

"அந்தப் பலவேசம் மொவத்திலேயே நீ எதுக்கடி இனிமே முழிக்கணும். உனக்கு நான் புருஷனா...அவன் புருஷனா! இனிமே அவன் பேச்சை இந்த வீட்டிலே எடுத்தா ஒரே வெட்டா உன்னை......" என்று அவன் கத்திக் கொண்டிருக்கும் போதே, தட தடவென்று உள்ளே நுழைந்த பொன்னி வெடுக் கென்று குறுக்கே புகுந்து, ஆறுமுகத்தின் முறட்டுப் பிடியினின்றும், பூவாயியின் தலைக்கு விடுதலை வாங்கிக் கொடுத்து, 'நீ இந்தக் குப்பத்தை ஒழிச்சுக் கட்டத் தான் வந்திருக்கே' என்று ஆறுமுகத்தைப் பார்த்துக் கத்தினாள்.

பொன்னியைப் பார்த்ததும் பூவாயி புதுத் தெம்பு வந்தவளைப் போல, 'தங்கச்சீ...இது பண்ணிட்டு வந்திருக்கிற காரியத்தைக் கேட்டியா? சோறு போடற நம்ம எஜமானை சவுக்குத் தோப்பிலே கழுத்தை நெறிச்சு அடிச்சிப் போட்டுட்டு வந்திருக்காம்...' என்று பூவாயி கூறிக் கொண்டிருக்கும் போதே, பொன்னி 'அக்கா' என்று குறுக்கிட்டுக் கத்தினாள்.

"இதோடு பேச்சைக் கேட்டுக்கிட்டு பேசறியே...! ஐயோ — இது அடிச்சுப் போட்டது கழுத்தை நெறிச்சது எல்லாம் என் புருஷனைத்

தான். ஐயோ... அதப் பார்க்கப் பார்க்க, என் பூவும், பொட்டும் போயிடுமோன்னு பயமாயிருக்கே அக்கா. அதச் சொல்லத்தானே அக்கா நான் இப்போ ஓடோடி உன் வீட்டுக்கு வந்தேன்'' என்று அவள் கூறிக் கொண்டிருக்கும் போதே ஆறுமுகம் — அலட்சியமாகக் குறுக்கிட்டு கேட்டான்.

''என்னடி மாத்தி மாத்தி 'சிணுக்' பண்ணுறீங்க? பலவேசம் எத்தினி பேருக்குடி புருஷன். ராமனெ எனக்குத் தெரியாது? கள்ளுக் கடை இல்லேன்னு அவன் தானே எனக்குச் சாராயமே வாங்கிக் கொடுத்தான். அவனையா எனக்குத் தெரியாது?

என் உயிர் தோழன்டி அவன். பெண்டாட்டி கொலிசை, அவளுக்குத் தெரியமெ எடுத்து வித்து எனக்குச் சரக்கு வாங்கிக் கொடுத்த உத்தமண்டி அவன். அவனைப் பத்திப் பேச உங்களுக்கு ரோக்கிதை ஏதுடி!''

ஆறுமுகத்தின் உளறலின் மூலம் பொன்னிக்குப் புரியாதிருந்த ஒன்று புரிந்தது. அது — தனக்குத் தெரியாமல், தன் புருஷனே வீட்டிலிருந்து தன்னுடைய வெள்ளிக் கொலுசைத் திருடிச் சென்று விட்டான் என்பதுதான்.

எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியில் தன்னுடைய அம்மா ஆசை ஆசையாய்ச் செய்து

போட்டு அனுப்பியது. அதையும் புருஷன் திருட்டுத் தனமாய் எடுத்துச் சென்று கூட்டாளி களுடன் குடித்துத் தீர்த்திருக்கிறான். அவளால் கோபத்தை அடக்க முடியவில்லை. பூவாயி பக்கத்தில் இருக்கிறாள் என்பதையும் மறந்து ஆறுமுகத்திடம் கத்தினாள்.

"அப்படிப்பட்ட உன்னோடு உசிருக்கு உசி ரான சினேகிதனுக்குத்தான்யா நீ நல்ல கைமாறு பண்ணிருக்கே. என் புருஷன் வாங்கிக் குடுத்த கள்ளைக் குடிச்சுப்புட்டு அவரு தலையை உடைச்சு; கழுத்தை வேறே நெரிச்சுக் கொல்லப் பார்த்திருக்கியே...! நீ நல்லா இருப்பியா?" என்று கூறிவிட்டு அழுதாள்.

பூவாயிக்கு ஒரு நிமிஷம் ஒன்றுமே புரிய வில்லை. பொன்னியின் பக்கம் திரும்பி, "என்னடி இதெல்லாம். ஒரே குழப்பமாயிருக்கு. இதானா, எஜமான் கழுத்தை நெரிச்சுப் போட் டுட்டேன்னு சொல்லுது. நீயானா, அது நம்ம எஜமான் இல்லே—உன் புருஷன்னு சொல்லறே! கொலுசுன்னு சொல்லறே. என் மனசை என்னமோ பண்ணுதடி. என்றாள் பூவாயி".

உடனே பொன்னி "அக்கா, நான் சொல்லற கதை முழுவதையும் கேட்டுட்டுப் பேசு. என் புருஷன் எனக்குத் தெரியாமே என் வெள்ளிக் கொலுசை எடுத்துட்டுப் போயிருக்கு. அதை அடகு வெச்சு, கள்ளு வாங்கி அத்தினி பேரும்

கண்ணு மண்ணு தெரியாமெ குடிச்சிருக்காங்க. போலத நல்லாத் தலைக்கு ஏறினதும், இது என் புருஷனை நம்ம எஜமான் பலவேசம்னு நெனச்சுக்கிட்டு, கட்டையாலே மண்டைலே அடிச்சுப்பிட்டு, கழுத்தை வேறே நெருச்சுப் போட்டுட்டு; இங்கே உன்கிட்டே வந்து ஒண்ணுகிடக்க ஒண்ணு உளருது அக்கா உன் புருஷன்'' என்று பொன்னி கூறிக் கொண்டிருக்கும் போதே ஆறுமுகத்திற்கு எல்லை மீறிக் கோபம் வந்து விட்டது.

'ஏய்...யாரைப் பார்த்துடி... உளறான்னு சொன்னே! என்னை என்ன குடிகாரப் பயல்னு நினைச்சியா! இதப்பாரு...இப்பவே உன்னையும், அந்தப் பலவேசம் கிட்டேயே அனுப்பி வைக்கிறேன்' என்று கத்தியபடி, தன் கையிலிருந்த தடியால் பொன்னியை அடிக்கப் போனான்.

இதைச் சற்றும் எதிர்பாராத பூவாயி தன் இடுப்பிலிருந்த குழந்தையுடன் பொன்னி மீது அடி படாமல் தடுக்க குறுக்கே பாய்கிறாள். ஆறுமுகத்தின் அந்த அடி குழந்தையின் தலையில் பட்டு ரத்தம் பீறிடுகிறது.

'பாவி! பெத்த புள்ளையையே கொன்னுப்பிட்டியே...' என்று பூவாயி பெரிதாக அழுதாள்.

பொன்னி பதறியபடி, 'வா...அக்கா சீக்கிரம்.. குழந்தை தலையிலே ரத்தம் கொட்டுது' என்று

பூவாயியையும் அழைத்துக் கொண்டு வைத்தியர் வீட்டை நோக்கி வேகமாகச் சென்றாள்.

இதைக் கண்ட ஆறுமுகம், ஆத்திரத்துடன், 'கழுதங்களா... செத்துப் போன பலவேசத்தைப் பார்த்து மாரடிக்கவா ரெண்டு பேருமா... ஓடறீங்க. ஓடுங்க ஓடுங்க...'' என்று கத்திக் கொண்டே பின்னால் சென்றவன், நிலைப்படி இடுக்கி 'தடால்' என்று கீழே விழுந்தான்.

# 9

*"எந்த வகையான குற்றத்திற்கும் தகவல் பெறக் கூடிய இடம் மதுபானம் விற்கும் இடம் தான். குற்றம் பற்றி விசாரிக்க ஒரு போலீஸ் காரர் முதன் முதலில் போகும் இடமும் அதுவாகவே இருக்கும். நல்லவர்களை ஒரு போதும் அங்கே போய் யாரும் தேடவே மாட்டார்கள்."*

—வில்லியம் ஜென்னிங்ஸ் பிரெளன்

குழந்தையைப் பார்த்துவிட்டு வைத்தியர் கூறிய வார்த்தையைக் கேட்டதும் பூவாயி, பொன்னி, இருவருமே திடுக்கிட்டுப் போயினர். பொன்னி மறு நிமிஷம் ஓட்டமும் நடையுமாக பலவேசம் வீட்டிற்குச் சென்று விபரத்தைக் கூறுகிறாள். உடனே பலவேசம் பொன்னியுடன் வைத்தியர் வீட்டிற்கு வந்தார்.

ஆறுமுகத்தின் குழந்தை தலையில் தாற்காலிக மாக மருந்திட்டு, பெஞ்சி மீது வைத்தியர் படுக்க வைத்திருந்தார். அருகில் பூவாயி அழுது கொண் டிருந்தாள்.

பலவேசம் பிள்ளையைக் கண்டதும் வைத் தியர், 'ரொம்ப ரத்தம் போயிடுச்சு. சீக்கிரமா டவுனுக்குக் கொண்டு போய், சர்க்கார் ஆஸ்பத் திரியிலே சேருங்க...இல்லாட்டி உசிருக்கே ஆபத்து' என்று துரிதப்படுத்தினார்.

பலவேசம் சற்று கவலையுடன் 'உசிருக்கு ஒண்ணும் ஆபத்தில்லையே' என்று கேட்டார்.

'ஒண்ணும் சொல்ல முடியாது, அடி பலமாத் தான் பட்டிருக்கு. ஆனாலும் கவலைப்படாதீங்க, கடவுள் காப்பாத்துவார். சீக்கிரமாப் புறப்படுங்க' என்றார்.

வாசலில் தயாராகக் காத்திருந்த வண்டியில், பூவாயி தன் குழந்தையை அணைத்தபடி ஏறி அமர்ந்து கொண்டாள்.

'நானும் கூடவறேனுங்க' என்ற பொன்னி யிடம், 'வேண்டாம்; நீ உடனே வைத்தியரை உன் வீட்டுக்கு அழைச்சிட்டுப்போய்; உன் புருஷனைக் கவனி. முடுஞ்சா காலமே ஆஸ்பத் திரிக்கு வா' என்று கூறிவிட்டு வண்டியில் ஏறி உட்கார்ந்து வேகமாக ஓட்டஉத்திரவிட்டார்.

வண்டி கண்ணுக்கு மறைகிறவரை பார்த்துக் கொண்டிருந்த பொன்னி, எஜமான் கூறியபடி வைத்தியரையும் அழைத்துக் கொண்டு தன்னுடைய வீட்டை நோக்கிப் புறப்பட்டாள். வழி முழுவதும், அவள்மனம், தன் புருஷனைவிட, அந்தக் குழந்தையைப் பற்றியே பெரிதும்கவலைப் பட்டுக் கொண்டிருந்தது.

## 10

"எந்த நாட்டிலும், எந்தக் காலத்திலும் மனிதர்களைக் கொல்வதற்குக் கண்டுபிடித்த வற்றுள், மிகவும் கொடூரமான-திறமையான கருவி மது."

—ஜான்ரஸ்கின்

பொழுது விடிந்ததும், ஆறுமுகத்திற்கு ஒவ்வொன்றும் நன்றாகவே நினைவிற்கு வந்தது. ஓட்டமும், நடையுமாகத் தன் நண்பன் ராமன் வீட்டை அடைந்தான். அங்கே தலையில் ஒரு கட்டுடன், கயிற்றுக் கட்டிலில் ராமன் படுத்திருந்தான். ஆறுமுகம் மௌனமாக வந்து ராமனின் கட்டிலின் அருகே தரையில் உட்கார்ந்து கொண்டான்.

சிறிது நேரம் யாரும் எதுவும் பேசிக் கொள்ள வில்லை. தலைமாட்டில் உட்கார்ந்திருக்கும் ஆறு

முகம் திடீரென்று அழுவதைக் கண்டதும், 'என்னையும் அடிச்சிட்டு; உன் பிள்ளை மண்டையையும் பிளந்துட்டு இப்ப நீஎதுக்கண்ணே உட்கார்ந்து அழறே? புள்ளைக்கு ஒண்ணும் ஆகாது. தைரியமா வீட்டுக்குப் போ...' என்றான் ராமன்.

உடனே ஆறுமுகம், 'நான் ரொம்பப் பாவிடா ராமா. வீட்டிலே தனியா இருக்க முடியல்லே. மனசைப் போட்டு உருட்டுது.

இந்தா, இந்த ரூபாயை வாங்கிக்கோ. முதல்லே பொன்னியோடு கொலுசை மீட்டி வாங்கிட்டு வந்துரு. அப்பத்தான் என் மவ கண்ணம்மா பொழப்பா...'' என்றான்.

'என்னண்ணே இது! இதுக்காகவா வந்தே! அதையெல்லாம் பிறவு பார்த்துக்கலாம். மனசைத் தைரியமா வெச்சுக்கோ. கண்ணம்மாவுக்கு ஒண்ணும் ஆகாது.'

'இருந்தாலும் புள்ளயப் போய் பார்க்கணும் போலே இருக்குடா ராமா. வைத்தியரய்யா கூடக் கையை விரிச்சிட்டாராமே. எனக்கு என்னமோ மனசே சமாதானமில்லே.'

'ஆகா! இந்த நெனப்பெல்லாம், குடிக்கப் போறதுக்கு முன்னே இருக்கணும். இப்ப அழுது என்ன பிரயோசனம்? எனக்கும் சேர்த்துத்தான் சொல்லறேன்.

'அண்ணே, நீ ஒண்ணும் கவலைப்படாதே. சர்க்கார் ஆஸ்பத்திரியிலே நல்லாக் கவனிச்சுப் பாங்க. முதலாளி ஐயா ராத்திரி ரொம்பநேரம் ஆஸ்பத்திரியிலே இருந்துட்டுத்தான் வந்திருக் காரு. அவருதான் சொன்னாரு; தையல் போட் டிருக்காங்க சீக்கிரம் அனுப்பிடுவாங்கன்னு. பொன்னி, எதுக்கும் பார்த்துட்டு வர்றேன்னு கருக்கல்லியே ஆஸ்பத்திரிக்கிப் போயிருக்கு' என்று ஆறுமுகத்தை சமாதானப்படுத்தினான்.

ஆறுமுகம் தன் இரண்டு கைகளாலும் தலை யில் ஓங்கி அடித்துக் கொண்டு துக்கம் தாங்க முடி யாமல், 'ராமா; நம்ம எஜமான்—அந்த தெய்வத்து முகத்திலே இனிமே நான் எப்படிடா விழிப்பேன்' என்று அழுதான்.

'அவரு ரொம்பப் பெரிய மனுஷன் அண்ணே. எதையும் மனசிலே வெச்சிக்க மாட்டாரு.'

'இருந்தாலும் நான் ரொம்பவும் கெட்டுத்தான் போயிட்டேன். என் புள்ளையப் பத்திக் கூட இல்லே...' அப்போ பூவாயி குறுக்கே வந்து க்காட்டி... உன் பொன்னிக்கு இல்லியா ராமா இந்தக் கதி வந்திருக்கும்.'

''அதப்பத்தி யெல்லாம் இப்போ என்னா நீர எஜமான்னு நினைச்சு, என் கழுத்தப் பிடிச்சப்போ, என் ஆட்டம் 'குளோஸ்'னு ஒரு

நிமிஷம் நெனச்சுப் புட்டேன். மாரியாத்தா என்னைக் காப்பாத்தலியா!''

''நெனச்சுப் பார்க்கவே வெக்கமா இருக்குடா ராமா''

''நீ ஒண்ணையும் நெனைச்சுப் பார்க்க வேணாம். இன்னும் கொஞ்ச நேரத்திலே எஜமான் வண்டியிலே உன் பிள்ளையும், பூவாயியும் வந்துடு வாங்க''

'வந்தா! பூவாயி என்னைக் கொன்னுப் புடுவா. பெத்த அப்பன் காரன், ராப்பூரா ஆஸ்பத்திரிப் பக்கம் வந்து எட்டிக்கூடப் பார்க்கல் லேன்னு பேசப்போறா...எதற்கும் நான் ஆஸ் பத்திரிக்குப் போய் பார்த்துட்டுவற்றேன் ராமா' என்று ஆறுமுகம் புறப்பட்ட போது ராமன் தடுத்து நிறுத்தினான்.

'அண்ணே...நான் தான் பொன்னி போயிருக் குன்னு சொன்னேன் இல்லே; இப்போ நீ வேறே போயி என்ன பண்ணப் போறே! எதுக்கும் அவ வரட்டும், ரெண்டு பேருமா போய்ப் பார்ப்போம்' என்று ராமன் கூறிக் கொண்டிருக்கும் போதே கையில் ஒரு பையுடன், தர்மா பிளாஸ்க்குட னும் பொன்னி வீட்டினுள் நுழைந்தாள்.

மனைவியைப் பார்த்ததும் ராமன் ஆவலுடன் ''பாத்தியா புள்ளே! குழந்தை எப்படி இருக்கு? டாக்டரு என்ன சொன்னாரு?'' என்று கேட்டான்.

பொன்னி, தன் கணவர் பக்கத்திலிருக்கும் ஆறுமுகத்தை வெறுப்போடு பார்த்தபடி, ''இந்தப் பூட்டுக்குப் பொழச்சிக் கிட்டுது'' என்றார்.

ஆறுமுகம் மகிழ்ச்சியோடு, 'எனக்கு இப்பவே, கண்ணம்மாவையும், பூவாயியையும் பார்க்க ணும் போலெ இருக்கு. போகலாமா பொன்னி?' என்று கேட்டான்.

'இவ்வளவு ஆசையிருக்குன்னா அப்ப ஏன் கம்பாலே அடிச்சே!'

'நான் என்ன புள்ளையவா அடிச்சேன்?'

'புறவு? என்னை அடிச்சாப் பரவாயில்லேங் கறியா?'

'ஐயோ! பொன்னி; உன்கால்லே வேணா 'விழறேன்—பழசைக் கிளறாதே' நான் ரொம்ப நொந்து போயிருக்கேன் இனிமே குடிக்கறதில் லேன்னு, சபதம் பண்ணிக் கிட்டேன்.

'சாயங்காலம் வரைக்குமா?' பொன்னி இடக் காகக் கேட்டாள்.

'ஆயுசுக்கும் குடிக்க மாட்டேன். இப்ப உன் முன்னாலேயும் சத்தியம் பண்றேன்.

'போதும். இதபோலெ நூறு சத்தியத்தைப் பொழுது விடிஞ்சதும் கேட்டுக் கேட்டுக் காது புளிச்சுப் போச்சு. நீ குடிச்சாலும் என்புருஷனை கூட இழுத்துட்டுப் போகமே இருந்தாப் போதும்.'

'நீ என்னை நம்பாட்டிப் பரவாயில்லே பொன்னி; என் பூவாயி என்னை நம்புவா; எனக்கு உடனே அவுங்களெயெல்லாம் பார்க் கணும் போலெ இருக்கு; போகலாமா பொன்னி?' என்று ஆறுமுகம் கேட்டான்.

உடனே பொன்னி, 'ஊஹூம், நீ ஆசுபத்திரிப் பக்கமே தலை வெச்சுப் படுக்கப்படாதுன்னு எஜமான் கண்டிப்பா சொல்லியிருக்காரு. நீ போனா, ஐயா இத்தனை கஷ்டப்பட்டதும் வீணாப் போறதுமில்லாமே—கேஸே வேறோரு தினுசா மாறிடுமாம்.' என்றாள்.

இதைக் கேட்டதும் ஆறுமுகம் ஒன்றும் புரி யாமல்'என்ன பொன்னி-கேஸீ—கிஸீன்னு பெரிய வார்த்தையெல்லாம் பேசறேன்னு ஆச்சர்யத் துடன் கேட்டான்.

'நானா ஒண்ணும் சொல்லல்லே. அங்கே நடந்ததைதான் சொல்லறேன்.'

'என்ன நடந்தது பொன்னி?' என்று ராமனும் விஷயத்தை அறிந்து கொள்ள வேண்டிய ஆவலுடன், மனைவியைப் பார்த்துக் கேட்டான்.

உடனே பொன்னி, 'ஆஸ்பத்திரிக்கு புள்ளையைக் கொண்டு போனதும், டாக்டரு என்ன நடந்துச்சுன்னு எஜமான்கிட்டே கேட்டாராம்.' என்று கூறிகொண்டு வரும்போதே, ஆறுமுகம் இடைமறித்து, 'அதுக்கு எஜமான் என்ன சொன்னாரு?' என்று படபடப்போடு கேட்டான்.

உடனே பொன்னி, 'செய்யறதையும் செஞ்சுப் புட்டு; இப்ப மட்டும் ஏன் பதற்றே? நம்ம எஜமான் யாரையும் காட்டிக் கொடுக்கல்லே. குடிச்சிப்புட்டுவந்து, நீ வீட்டிலே ரகளைபண்ணினதையும், கம்பாலெ அடிச்சதையும் எல்லாம் சொன்னா அது போலீஸ் கேஸாயிடுமாம். அப்பாலே, குழந்தையோடு அப்பனைக் கொண்டான்னு பிடிச்சுக்கு வாங்களாம். காரியமே இல்லே கெட்டுப் போகும்! அதனாலே நம்ம எஜமான் இதையெல்லாம் முன்னாடியே யோசனை செய்து வெச்சிருந்தார் போலிருக்கு'.

"அப்படியா?" என்றான் ஆறுமுகம்

"ஆமாம்! டாக்டரு கேட்ட கேள்விக்கு எஜமான் 'டக் டக்குன்னு' பதில் சொன்னாராம்.

இந்தப் பெண்ணோடு அம்மா — இதோ இருக்கிற பூவாயி; என் வீட்டிலே தான் வேலை செய்யுது. பரணையிலேருந்து விறகு எடுத்துப் போட்டுக் கிட்டிருந்தப்போ, கீழே விளையாடிக் கிட்டிருந்த இது மேலே தவறுதலா விழுந்துட்டுது, அப்படின்னு சொன்னதும், டாக்டரு அதைக் குறிச்சிக்கிட்டு, அவசரமா குழந்தையை உள்ளே எடுத்து கிட்டுப் போனாரு.'' என்று பொன்னி கூறினாள்.

''ஆபத்துக்குப் பாவமில்லேன்னு என்னைக் காப்பாத்தறதுக்காக, எஜமான் எப்படியெல்லாம் பாடு பட்டிருக்காரு. இவ்வளவு பொன்னான எஜமானைப் புரிஞ்சுக்காம அவரையே அழிக்க ணும்னு ஆசைப்பட்டேனே'' என்று ஆறுமுகம் புலம்பினான்.

உடனே பொன்னி, ''எஜமான் இது மட்டுமா செஞ்சாரு? நமக்கு அவரு மனச உருவத்திலே நடமாடற தெய்வம்னா தெய்வம். அவருமட்டும் உடனே ரத்ததானம் செய்யல்லேன்னா, உன் புள்ள கண்ணம்மாவை நீ உசிரோடே பார்க்க முடியாது'' என்று கூறிக் கொண்டுவரும் போதே ராமன் இடைமறித்துக் கேட்டான்:

''என்ன பொன்னி, புதிசு புதிசா விஷயமெல்லாம் பேசறே?''

“நானா பேசறேன்? ஆஸ்பத்திரியே பேசுது. டாக்டருங்க, நர்ஸ் அம்மா, எல்லாரும் பேசிக்கறாங்க.”

“நடந்ததை கொஞ்சம் விவரமாச் சொல்லு பொன்னி.” ஆறுமுகம் கெஞ்சினான்.

“கண்ணம்மா தலையிலே பட்ட அடியினாலே அளவுக்கு அதிகமா ரத்தம் சேதமாயிடுச்சாம். உடனே புது ரத்தம் கொடுக்காட்டி பிள்ளை பிழைக்காதுன்னுட்டாரு டாக்டர்.

‘அப்புறம்?’—

‘கண்ணம்மாவோடு ரத்தத்தை எடுத்துப் பரிசோதிச்சுப்புட்டு என்னமோ, ஏ, பி. சி. டி, குரூப்பு; கிரூப்புன்னு பேசிக்கிட்டாங்க.

அப்புறம்தான் பூவாயிக்கே புரிஞ்சுதாம். கண்ணம்மாவோடு ரத்தத்துக்கு சேர்றமாதிரியான ரத்தம் ஆஸ்பத்திரியிலே ஸ்டாக் இல்லியாம். என் ரத்தத்தை எடுத்துக்குங்கன்னு பூவாயி சொல்லிச்சாம். ஆனா அது பொருத்தமில்லாமப் போயிடுச்சு. உடனே நம்ம எஜமான், ‘என் ரத்தம் அந்த குரூப்தான்னு நினைக்கிறேன்; வேணும்னா டெஸ்ட் பண்ணிப் பாருங்க டாக்டர்னு’ கேட்டுக்கிட்டாராம்.

டெஸ்ட் பண்ணிப் பார்த்தாங்க. எஜமான் ரத்தம், கண்ணம்மாவுக்குப் பொருத்தமாப் போயிடுச்சு. அவரு கொடுத்த ரத்ததானத்தினாலே தான் நம்ம கண்ணம்மா இப்போ கண்ணைத் திறந்து சிரிச்சுப் பேசிக்கிட்டிருக்கா'' என்று பொன்னிக் கூறிக் கொண்டு வரும்போதே ஆறுமுகம் முகத்தில் அறைந்து கொண்டு 'ஐயோ நீங்க எவ்வளவு பெரிய உதவி பண்ணி என் மகளைக் காப்பாத்தியிருக்கீங்க. இந்தப் பாவி உங்க முகத்திலே எப்படி விழிப்பேன். நான் உங்களுக்கு நெனச்ச துரோகத்துக்கு, காறித் துப்பி, காலாலே என்னை எட்டி உதைச்சாத்தான் என் மனசு சமாதானம் ஆகும்.'' என்று ஏதோ வாய்க்கு வந்தபடி புலம்பிக் கொண்டிருந்தான்.

# 11

''எந்தக் கொடிய பாபக் கேட்டையும் விட மதுவே அதிகமான வீடுகளையும் பாழாக்கி, அதிகமானவரின் வாழ்வைச்சிதைத்தும் கொடூரம் புரிந்துள்ளது;

— கிப்பன்ஸ் பாதிரியார்

அன்று பொங்கல் திருநாள். அந்த கிராமமே மிராசுதார் பலவேசம் பிள்ளையின் விஸ்தாரமான பண்ணை வீட்டின் முன்னே கூடியிருந்தது.

அவரது பண்ணையில் வேலை செய்கிறவர்கள், தெருவெல்லாம் தோரணம் கட்டி, வீடு முழுவதும் பூக்களால் அலங்காரம் செய்திருந்தனர்.

வீட்டிலுள்ள விஸ்தாரமான கூடத்தில் போடப்பட்டிருந்த நாற்காலியில் கம்பீரமாக உட்கார்ந்திருந்த பலவேசம் பிள்ளையை வரிசையாக வணங்கி, அவர் கையால் கொடுத்த புத்தாடைகளை வாங்கிச் சென்று கொண்டிருந்தனர்; பலவேசம் பிள்ளையின் நாற்காலியின் ஒருபுறம், ஏராளமான புதிய வேஷ்டி, மறுபுறம் புதிய கைத்தறிப் புடவைகளும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது.

வரிசையாக வந்து, ராமனும், பொன்னியும் கூட புத்தாடை வாங்கிச் சென்றுவிட்டனர். அடுத்து வந்த ஆறுமுகத்திற்கு என்ன தோன்றியதோ ஆவேசம் வந்தவனைப் போல அவரது இருகால்களையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு

'உங்க உசிருக்கு எமனா வர இருந்த என் செய்கையை நெனச்சுப் பார்க்காமெ, என் குழந்தைக்கு, உங்க ரத்தத்தைக் குடுத்து உசிரைக் காப்பாத்தியிருக்கீங்களே எஜமான். உங்களை எப்படிப் புகழுறதுன்னே தெரியல்லே.'' என்று சிறு குழந்தையைப் போல் அழுதான்.

'பலவேசம்பிள்ளை அவனைத் தூக்கி நிறுத்தி தன்மேல் துண்டால் அவனது கண்ணீரைத்

துடைத்தார். அவனை நேரே அழைத்துச் சென்று காந்திஜியின் படத்திற்கு முன்கொண்டு போய் நிறுத்தி வணங்கச் சொன்னார்.

"புகழுக்கும், வீண்பெருமைக்கும் ஆசைப் பட்டு, யாரும், எந்தக் காரியமும் செய்யக்கூடாது. என்னை நீ இப்படிப் புகழும்படியா, நான் எந்தக் காரியமும் செய்யல்லே. சமூகத்திலே உள்ள ஒவ் வொரு மனுஷனும்; பிறருக்குத் துயரம் ஏற்படும் போது பரஸ்பரம் செய்யற உதவியைத்தான் நான் குழந்தை கண்ணம்மாவுக்குச் செஞ்சிருக்கேன்.

இதிலே புகழ்ச்சிக்கே இடமில்லே. பகைமை உணர்வு பாராட்டாமே, ஒவ்வொருத்தரும் சகோ தர பாசத்துடன் வாழணும்னுதான் காந்திஜி ஆசைப்பட்டார்.

யார் என்ன தீங்கு செய்தாலும் அதற்காக நம் மனதில் பழிவாங்கற எண்ணம் எழக்கூடாதுன்னு தான் காந்திஜி சொல்லியிருக்கார். அதை எல் லோரும் மனதிலே வைத்திருங்கள் என்றார் பல வேசம் அமைதியாக.

உடனே ஆறுமுகம் 'நா—கூட வேணும்னு மனசறிஞ்சு அப்படி ஒரு தப்பும் செய்ய நினைக் கல்லே. அந்தப் பாழாப்போன குடிதாங்க எங்க புத்தியைக் கெட்ட வழியிலே திருப்பிட்டுது."

ஆறுமுகத்தின் வார்த்தையைக் கேட்டு பலவேசம் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார்.

"ஆறுமுகம் இப்போச் சொன்னியே ஒரு வார்த்தை. குடம் பாலிலே துளி விஷம் கலந்த மாதிரி மதுவுக்கு ஒருத்தன் அடிமையாயிட்டா, அதன் பிறகு அவனிடமுள்ள எந்த உயர்ந்த குண மும் சோபிக்க முடியாது.

அவனை நம்பி எந்தப் பொறுப்பான காரியத் தையும் ஒப்படைக்க யாரும் முன் வரமாட்டாங்க ஒப்படைத்தாலும் அவனால் அதைத் திறமை யாகச் செய்து முடிக்க முடியாது.

சுருக்கமாகச் சொன்னால், குடிக்கப் போகிற ஒருவன் முதன் முதலில் தன் அறிவைத் தான் அடகு வைக்கிறான். குடிப்பழக்கத்திற்கு அடிமை யானவனிடம், அது வரை இருந்து வந்துள்ள, அன்பு, இரக்கம், வீரம், நேர்மை, செயல்திறன், உழைப்பு, விடாமுயற்சி, உயர்ந்த லட்சியங்கள் ஆகிய அனைத்தும், அவன் குடிக்கத் தொடங்கிய வுடனே, ஒன்றன் பின் ஒன்றாக அவனிடமிருந்து விடை பெற்று விலகிச் சென்று விடுகின்றனர். எல்லா உயர் குணங்களையும் அவனிடமிருந்து பிடுங்கிக் கொண்டு; அவனுடைய மனைவி, மக்கள், என்கிற அன்பான குடும்பத்தையும் உருக் குலைத்து விட்டு; இத்தனையும் போதாது என்று மது அரக்கன் சிறுகச் சிறுக அவனது உயிரையும் குடித்துத் தன் பசியைத் தீர்த்துக் கொள்கிறான். இதை யாரும் மறுக்க முடியாது.

நீ குடிக்காமல் இருந்தால்—அதாவது நீ உன் சுயநினைவோடு இருந்தால் உன் உயிருக்குயிரான ராமனை இப்படி அடிக்க உனக்கு மனம் வருமா?

மனைவியின் கால் கொலுசைத்திருடி உனக்கு மது வாங்கிக் கொடுத்த ராமனையே உன்னால் எப்படி அடிக்க முடிந்தது. அவன் மனைவி இந்தப் பொன்னியை நீ எதற்காக அடிக்க எண்ணம் வேண்டும். அந்த எண்ணம் உனக்கு ஏற்படாவிட்டால்; உன் அருமை மகள் கண்ணம்மாவுக்கு இவ்வளவு கஷ்டம் நேர்ந்திருக்குமா? இதெல்லாம், உன்னையும் மீறி உன் உத்திரவு இல்லாமலே—உன்னைச் செய்யும்படித் தூண்டி விடுகிற மது அரக்கனின் வேலை என்பது இப்போதாவது உனக்குப் புரிகிறதா?

இத்தகைய கொடுமைகளுக்கு மனிதன் இரையாகக் கூடாது என்று எண்ணித்தான் காந்திஜி அல்லும் பகலும் ஓயாது மதுவிலக்குப் பிரசாரம் செய்தார்.

ஆனால் இதுவரை, வெறும் பிரசாரத்தினாலும், சட்ட திட்டங்களினாலும் எந்தவிதப் பயனும் ஏற்பட்டுவிட வில்லை. முதலில் நம்முடைய மனதிலிருந்து மதுவை அகற்ற வேண்டும்.

குடிப்பதினால், உடம்புக்கு எவ்வித நன்மையுமில்லை—மாறாகச் சேர்த்து வைத்த பணமும்,

நல்ல ஆராக்கியமான உடல் நலமும்தான் பாழாய்ப் போகிறது என்பதை நன்றாக மனதில் புரிந்து கொண்டு ஒவ்வொரு மனிதனும், இனிமேல் நான் குடிப்பதில்லை என்று உள்ளத்தில் உறுதி பூண வேண்டும். அப்போதுதான் காந்திஜி கனவு கண்ட ராமராஜ்ஜியம் இங்கே பிறக்கும்' என்று பலவேசம்பிள்ளை கூறிக் கொண்டு வரும்போது ஆறுமுகம் ஆவேசம் வந்தவனைப் போல் கூறினான்:

'என் உசிருக்குசிரான பெண்டாட்டி, பிள்ளை சத்தியமா, இனி நான் குடிக்க மாட்டேன். இது சத்தியம்' என்றான்.

பலவேசம்பிள்ளை அவனை ஒருமுறை ஆழமாகப் பார்த்தார்.

'இது நீ எனக்காக—என்னைச் சந்தோஷப் படுத்துவதற்காகக் கூறிய சத்தியமல்லவே' என்று கேட்டார்.

'சத்தியமாக இல்லை' என்று ஆறுமுகம் அதற்கும் சத்தியம் செய்தான்.

பலவேசம் பிள்ளை கூறினார்: 'இப்படி எடுத்ததற்கெல்லாம் சத்தியம் செய்கிறவர்களை நான் எளிதில் நம்புவதில்லை. சத்தியம் என்பது ஒரு சொல்தான். அதை எந்த நோக்கத்திற்காகக்

கூறினோம்—அதை நம்மால் காப்பாற்ற முடியுமா—என்பதைப்பற்றி எல்லாம் தீவிரமாக யோசித்த பிறகுதான் சத்தியம் என்கிற வார்த்தையை உபயோகிக்க வேண்டும்.

காந்திஜி முன்னால் நீ சத்தியம் செய்திருக்கிறாய். பொங்கல் திருநாளான இன்றிலிருந்து இந்த நிமிஷத்திலிருந்து குடிக்காமல் இருக்க உன் மனதில் உறுதி இருக்கிறதா?' என்று கேட்டார்.

'நிச்சயம் இருக்கிறது எஜமான் நீங்க என்னைப் பார்க்கத்தானே போறீங்க!' என்று திருப்பிக் கேட்டான்.

'அப்படியா! என்று அவனை அணைத்துக் கொண்ட பலவேசம் பிள்ளை, மிகவும் மகிழ்ந்து போனார். பிறகு வீடு நிரம்பக் கூடியிருக்கும் தன்னுடைய வேலையாட்களையும், பண்ணையாட்களையும் பார்த்துக் கேட்டார்.

இந்த நிமிஷம் முதல் குடிப்பதில்லை என்று ஆறுமுகம் சத்தியம் செய்திருக்கிறான். ஆறுமுகத்தைப் பின்பற்றி உங்களில் யாருக்காவது குடிப்பழக்கத்தை விட்டு விடுகிற மனத்தெம்பு இருக்கிறதா என்று கேட்டார்.

உடனே அருகிலிருந்த ராமன் சட்டென்று காந்திஜி படத்தின் முன்னால் வந்து நின்று கொண்டு, "இந்த நிமிஷத்திலிருந்து நானும் குடிப்பதை விட்டு விட்டேன். காந்திஜி மீது ஆணை. ஏனெனில் அவரை விட ஒரு மகாத்மா இல்லை" என்று ஒரு வீரனைப் போல் கூறிவிட்டு தன் மனைவியின் அருகில் போய் நின்று கொண்டான்.

அவ்வளவுதான் — அடுத்த சில நிமிஷங்களில் பெரிய சலசலப்பு மூண்டது. அதன் பின் கூடியிருந்த அனைவரும் ஒருவர் பின் ஒருவராய் பலவேசத்தின் அருகிலும், காந்திஜியின் முன்னிலும் சத்தியமாக மொழிந்த வண்ணமிருந்தனர்.

பலவேசம் பிள்ளைக்கு புல்லாரித்தது. அவரது மகிழ்ச்சி வரம்பை மீறி நின்றது. உணர்ச்சிப் பெருக்கால் வார்த்தைகள் தடுமாறின. "அன்பார்ந்த சகோதரர்களே!"

இன்று ஒரு மறக்க முடியாத நாள். ஒவ்வொரு வருஷமும் பொங்கலன்று இந்த வீட்டில் நமது பண்ணையாட்கள் எல்லோரும் கூடுகிறோம். பரிசு கொடுக்கிறோம். ஆனால் இந்த வருஷப்

பொங்கல் தான் உண்மையான தமிழ்ப் பொங்கல் திருநாள்.

"பால் பொங்குகிற இந்த நல்ல நேரத்தில்— போதைப் பொருளான கள்ளை மனத்தாலும் நினைக்கமாட்டோம்" என்று நீங்கள் மேற் கொண்டுள்ள சத்தியத்தை நிச்சயம் நிறைவேற்று வீர்கள் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இனிமேல் என்றுமே உங்கள் வீடுகளில் பால் பொங்கும்.

பஞ்சம், பற்றாக்குறை இராது. மனைவி மக்களின் அன்பும், பாசமும், உங்களுக்கு வற்றா மல் கிட்டும். நல் வாழ்வு மலரும்; இந்த பண்ணை யின்; இந்த கிராமத்தின் உற்பத்தி பெருக உங் களின் உழைப்பு மேலோங்கி நிற்கும். இத்தனை காலம் உங்களை அடிமைப்படுத்திக் கொண்டிருந்த மது அரக்கனை இன்று நீங்கள் அனைவரும் ஒன்று கூடி அடிமைப் படுத்தி விட் டீர்கள். இந்த கிராமத்து மக்களின் மயக்கம் தெளிந்தது போல்; இந்த உலகம் முழுதுமுள்ள மது மயக்கமும் தெளிய வேண்டும்.

அப்போதுதான்—பாரதி கனவு கண்ட புதிய தோர் உலகை நம்மால் படைக்க முடியும். அறிவை

வளர்ப்போம்; மதுவை ஒழிப்போம். வாழ்க காந்திஜி நாமம் என்ற பலவேசம் பிள்ளை, ''பாரத மாதாவுக்கு'' என்று உரத்த குரல் கொடுத்தார்.

கூடி இருந்த அனைவரும், வீடே அதிரும் வண்ணம் ''ஜே'' என்று கோஷம் எழுப்பினர். அந்த கோஷத்தில் பலவேசத்திற்கு ஒரு புதிய நம்பிக்கை பிறந்தது.

"இந்த நாடு மதுபானப் பழக்கமற்ற நாடாகவும் இதன் கொடி கறையற்ற தேசிய சின்னமாகவும் மாறும் மட்டும்—நாம் மது வேண்டாம் என்று ஓயாமல் சொல்லிக் கொண்டேயிருப்போமாக!"

—ஜெ. பிராங்க் ஹான்லி

★

# இந்த நாவலைப் பற்றி...

மனித சமுதாயத்தின் ஒவ்வொரு துறையையும் மது கெடுக்கிறது. மதுவின் கோரப் பிடிக்குள் சிக்கி, குடிப் பழக்கத்திற்கு அடிமையாகி–குடும்பத்தைக் குருக்ஷேத்திரமாக்கி மிருகவாழ்வு வாழ்கிறமனிதனுக்கு-

குடியின் கேட்டினை விளக்கி, அவர்தம் தவறுகளை உணர்த்தி வளமான வாழ்விற்கு வழிகாட்டும் அரிய நாவல்.

GAYATHRI PUBLICATION

26 / B Vedachala Garden

MANDAVELI, MADRAS-600 028